Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 332 | வெள்ளிக்கிழமை | ஐப்பசி 12 ஆம் நாள் 29 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொற்று 540 சாவு 22

கொழும்பு, ஒக். 29
இலங்கையில் மேலும் 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன் 15



# நாட்டை மீட்க ஓரணியில் திரளுங்கள்!

### சஜித் பிரேமதாஸ அறைகூவல்

கொழும்பு, ஒக்ரோபர், 29
ஜனாதிபதித் தேர்தலில் நம்பி வாக்களித்த 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முட்டாள்களாக்கியுள்ளார். ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசிடமிருந்து நாட்டை மீட்டெடுக்க அனைத்து மக்களும் ஓரணியில் திரளவேண்டும்– என்று, அறைகூவல் விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. 15

## மின்னல் தாக்கி மாணவன் சாவு!

### முல்லையில் பரிதாபம்



முல்லைத்தீவு, ஒக். 29
முல்லைத்தீவில் மின்னல் தாக்கி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 06

## கூ.சங்கக் கிளைகளில் சீனி விற்பனை ஆரம்பம்

### மாகாண கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
வடக்கு மாகாணத்தில் உள்ள ப.நோ. கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விற்பனை செய்வதற்காக ஒரு 15

## யாழ்.மாநகர சீருடை விவகாரம்; பார்த்தீபனிடம் விசாரணை!

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்.மாநகர கண்காணிப்பாளர்களின் சீருடை யாருடைய அனுமதியுடன் அறிமுகப்படுத்தப்பட்டது? யார் அறிமுகப்படுத்தினார்கள்? சீருடைக்கு ஏன் இந்த நிறம் தெரிவு செய் 15

## அரசு கேலிக்கூத்து!

### ரத்ன தேரர் விசனம்

கொழும்பு, ஒக். 29
இந்த நாட்டில் ஓர் இன மக்கள் மட்டும் வாழவில்லை. பல்லின மக்களே வாழ்கின்றனர். இதனைக் கண்டிப்பாக ஆட்சியாளர்கள் மனதில் கொள்ள வேண்டும். 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், இந்த விடயத்தை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ளாதது பெரும் அவமானம் என்று, 15

## பங்காளிகளுடன் கோத்தா சந்திப்பு!

### இழுத்தடிப்பின் பின்னர் இறங்கிவந்தார்

கொழும்பு, ஒக். 29
கெரவலப்பிட்டிய 'யுகதனவி' மின் உற்பத்தி நிலையம், உரப்பிரச்சினை உட்பட 12 காரணிகள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தா 15

## செயலணியை கலையுங்கள்!

### ஜனாதிபதியிடம் சிவாஜி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 29
'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறி நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாக மீளப்பெற வேண்டும், அல்லது கலைக்கவேண்டும் 15

**முச்சந்தி முரளி**

"செயலணியைக் கலைக்காட்டி சனம் அரசாங்கத்தையே கலைச்சிடுங்கள் போல. சூதானமா நடப்பாரா கோத்தா?"



## கோத்தாவால் இலங்கையே இல்லாமற்போகும் நிலை!

### சஜித் அணி பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 29
"நாட்டில் தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணிக் குழுவால், 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பது மக்களுக்கு இல்லை என்றாலும் அது நடைமுறைப்படுத்தப்படும். இறுதியில் நாடும் 06

## சுற்றாடல் பொலிஸ் வருமுன் வடக்கை சுத்தமாக்குங்கள்!

### உள்ளூராட்சி சபைத் தவிசாளர்களுக்கு ஆளுநர் ஜீவன் அதிரடி உத்தரவு



யாழ்ப்பாணம், ஒக். 29
வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்து தவிசாளர்களும், தமது ஆளுகைப் பகுதிக்கு உட்பட்ட அனைத்துப் பகுதிகளையும் இரண்டு வாரங்களுக்குள் தூய்மையாக்கிவிட வேண்டும் என்று வடக்கு மாகாண 06

## சிறுபான்மையினரை விரட்டுவதுதான் ராஜபக்ச அரசாங்கத்தின் நோக்கமா?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 29
மிக மோசமான இனவாதியைக் கொண்டுவந்து 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று சொல்லச்சொன்னால் தமிழர்களையும் முஸ்லிம்களையும் இந்த நாட்டில் இருந்து விரட்டுவதும், அவர்களுக்கு எதுவுமே இல்லாமற் செய்வதுதான் இவர்களது நோக்கமா? இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன். யாழ். ஊடக அமை 06

# இராணுவத்தின் வசமிருந்த 11 ஏக்கர் காணி கையளிப்பு

**முல்லைத்தீவு, ஒக்.29**

**புதுக்குடியிருப்பில் இராணுவத்தின் வசமிருந்த 11 ஏக்கர் காணிகள் மாவட்டச் செயலரிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 7ஆம் வட்டாரத்தில் உள்ள 11 ஏக்கர் காணிகளே மீளக் கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கான ஆவணங்கள் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிலப்பிட்டிய வால், மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு 682ஆவது படைப் பிரிவு தலைமையகத்தில் நடந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ்.ஜெயக்காந் உட்பட அதிகாரிகள், 68ஆவது படைப்பிரிவு அதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அந்தக் காணிகளில் குடியிருந்தவர்களுக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தலைமையில் காணிக் கிளை அதிகாரிகளுக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் காணிகள் கடந்த காலங்களில் அரசால் லீசிங் அடிப்படையில் கொடுக்கப்பட்டன லீசிங் காலம் முடிந்துள்ளதால் தற்போது அரச காணிகளாகக் காணப்படும். இந்தக் காணிகளில் மக்கள் வான் பயிர்கள் நட்டு, வாழ்ந்துள்ளனர். தற்போதைக்கு இந்தக் காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்ய வேண்டாம். சட்ட நடவடிக்கையின் ஊடாக இந்தக் காணிகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் கலந்துரையாடலில் தெரிவித்தனர் என்று மக்கள் கூறினர்.

சில காணிகளில் இராணுவத்தினர் அமைத்துள்ள கட்டடங்கள் உள்ளன. சில காணிகளில் எந்தக் கட்டடங்களும் இல்லை. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தக் காணிகளில் வாழ்ந்தோம். இப்போது எமது சொத்துக்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன என்று காணிகளில் வாழ்ந்த மக்கள் தெரிவித்தனர்.

காணிகளைக்கையளிக்கும் நிகழ்வுக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை முற்றுமுழுதாக இல்லாது போயுள்ளது என்று தெரிவித்தார்.

இந்தக் காணிகளை மக்களிடம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுப்போம். விடுவிக்கப்பட்ட காணிகளில்மக்களின்அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைள் பிரதேச செயலர் ஊடாக எடுக்கப்படும் என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (எ-19)

# இந்திய மீனவர்கள் 23 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.29

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரையும் இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 14 ஆம் திகதி தமிழகத்தில் இருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த இரண்டு படகுகளுடன், 23 மீனவர்களை கடற்படையினர் கைது செய்து, காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைத்திருந்தனர்.

இவர்கள் மீதான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மீனவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஒ-4-26)



கொழும்புத் துறைமுக நகரில் அமைக்கப்பட்ட மணல் திட்டுகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட வாகனப் பந்தயப் பாதை பொதுமக்களின் பாவனைக்காக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இதில் அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பவித்ரா வன்னியாராச்சி எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)

# விளம்பர பலகையை அகற்ற மன்று தடை

மன்னார், ஒக்.29


மன்னார் நகரப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்ட தனியார் விருந்தினர் விடுதி விளம்பரப் பலகையை அகற்றுவதற்கு நீதிமன்று தடை விதித்துள்ளது.

இந்த விளம்பரப் பலகையை அகற்ற மன்னார் நகர சபைத் தலைவர் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். அதற்கு எதிராக விருந்தினர் விடுதி உரிமையாளர் மன்னார் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். தனிப்பட்ட பகை காரணமாகவே நகர சபைத் தலைவர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகிறார் என்று விருந்தினர் விடுதி உரிமையாளர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த மேல்நீதிமன்றம் அந்த விளம்பரப் பலகையை அகற்றத் தடை விதித்ததுடன், தொடர்ந்து விளம்பரப் பலகையைக் காட்சிப்படுத்த அனுமதி வழங்கியது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொலிஸ் விசாரணையில் சிக்கியது கேரளக் கஞ்சா!

மன்னார், ஒக்.29



மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுப்பாடு பகுதியில் இளைஞர் ஒருவரிடம் இருந்து 12 கிலோ 430 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

10 கிலோ 370 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், மேலும் 2 கிலோ 60 கிராம் கஞ்சா அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. மன்னார், கீரி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-213)

'மொட்டு' சின்னம் இல்லையேல்

# மைத்திரி, விமல், கம்மன்பில படுதோல்வியடைந்திருப்பர்!

பொதுஜன பெரமுன கடும் தாக்கு

கொழும்பு, ஒக்.29

'மொட்டுச் சின்னம் இல்லாதிருந்தால் மைத்திரிபால சிறிசேன, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்டவர்களால் நாடாளுமன்றம் வந்திருக்கமுடியாது. எனவே, அரசிலிருந்து வெளியேறுவதாக இருந்தால் தாராளமாக வெளியேறிச்செல்லுங்கள்.' இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவிக்கையில்,

'மைத்திரிபால சிறிசேன, விமல்வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் தனித்துப் போட்டியிட்டு வெற்றிபெற முடியுமா? பெரமுனவின் 'மொட்டு' சின்னம் இல்லாவிட்டால் அவர்களால் வெற்றி பெற்றிருக்கமுடியாது. 'மொட்டு' சின்னத்தால் தான் நானும் வெற்றி பெற்றேன். எனவே, கூட்டுப் பொறுப்பை அவர்கள் காக்க வேண்டும் - என்றார். (ம-44)

# உள்நாட்டில் பொருத்தப்பட்ட ஜீப் அறிமுகம்

கொழும்பு, ஒக்.29

உள்நாட்டில் பொருத்தப்பட்ட ஜீப் ரக வாகனம் ஒன்று சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாகனம் 30 சதவீத உள்ளூர் பொறிமுறையுடன் முதன் முறையாக உள்நாட்டில் பொருத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அறிமுக நிகழ்வு மத்துகம, வெலிபன்னவில் உள்ள வாகன ஒருங்கிணைப்பு மையத்தில் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ச, இலங்கையில் வாகன ஒருங்கிணைப்பு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தங்களது உள்ளூர்ப் பொறிமுறை சேர்ப்பை அதிகரித்துள்ளன என்று தெரிவித்தார். (எ-இ)



# சீனி இறக்குமதிக்கு விரைவில் தீர்வு

கொழும்பு,ஒக்.29

**சீனி இறக்குமதிக்குத் தேவையான டொலரைப் பெற்றுக்கொள்வதற்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**



சீனி இறக்குமதியாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்னவைச் சந்தித்திருந்தனர். மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடி அதற்கான தீர்வைப் பெற்றுத்தருவதாக இராஜாங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் விடுவிக்கப்படாத சுமார் 200 சீனிக் கொள்கலன்கள் உள்ளன. சீனி இறக்குமதிக்காக 18 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குமாறு இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மாதமொன்றுக்குக் குறைந்த பட்சம் 30 ஆயிரம் மெற்றிக் தொன் சீனியை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருகிலோ கிராம் வெள்ளைச் சீனியை 122 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் சிவப்புச் சீனியை 125 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கான நிர்ணய விலையை அரசு அறிவித்துள்ளபோதிலும், சில வர்த்தகர்களே அதனைக் கடைப்பிடித்துள்ளனர்.

நிர்ணய விலைக்கு அமைவாக சதொச மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் சீனியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நுகர்வோர் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார். (ஒ-4)

## மரங்கள் கடத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம்

இருபாலை,ஒக்.29

முறையான அனுமதிப் பத்திரம் இன்றி முதிரை, வேம்பு மற்றும் மஹோகனி போன்ற மரங்களை கடத்திச் சென்ற நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சந்தேகநபர் இருபாலைச் சந்தியில் வைத்து யாழ்ப்பாணம் வனபரிபாலனப் பகுதி வனவள அதிகாரியால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட மரங்கள் நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்டன. (ஐ-125)

# சிமெந்து தட்டுப்பாடு இரு மாதங்கள் நீடிக்கும்

சிமெந்துக்கு தட்டுப்பாடு மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் என்று சிமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிமெந்து இறக்குமதியாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சந்தையில் சிமெந்துக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு,டொலர் பிரச்சினையே காரணம். இதனால் சிறு விலை அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிமெந்து பைக்கற் ஒன்றின் விலை 93 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது ஒரு பைக்கற் சிமெந்து ஆயிரத்து 98 ரூபாவுக்கு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும், உரிய வகையில் சிமெந்து கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைக்கும் சிமெந்து பல்வேறு விலைகளின் கீழ் கிடைக்கின்றது என்று விற்பனையாளர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். ஒரு தடவைக்கு 100 சிமெந்து பைக்கற்றுகள் கிடைக்கின்றன. அவை 10 நிமிடங்களில் முடிந்து விடுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் சந்தைக்கு சிமெந்தைப் பெற்றுக் கொடுக்க இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தி நிறுவனத்தினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சிமெந்து தட்டுப்பாட்டால், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தரப்பினர், சிமெந்துக் கல், பூந்தொட்டி மற்றும் பூங்கா அலங்காரப் பொருள்கள் உற்பத்தியாளர்களின் வருமானங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. (ஒ-4)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்துமாறு போராட்டம்



முல்லைத்தீவு, ஒக்.29

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை வெளிப்படுத்தக் கோரி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம், ஆயிரத்து 696 நாள்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தொடர்போராட்டம் முன்னெடுக்கப்படும் கொட்டகைக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம், கொரோனா சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய முன்னெடுக்கப்பட்டது.

“எங்கே எங்கே உறவுகள் எங்கே?”, “குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து”, “வேண்டும் நீதி வேண்டும், சர்வதேசமே பதில் சொல்” போன்ற கோசங்கள் எழுப்பியவாறு, பதாகைகளைத் தாங்கியபடி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, 15க்கும் மேற்பட்ட படைப்புலனாய்வாளர்கள் அந்த இடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டதுடன், போராட்டம் நடத்தியவர்களை ஒளிப்படமும் எடுத்தனர் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-19)




**வீட்டில** ஒராளுக்கு கொரோனா வைரஸ் தொத்திட்டு எண்டால், அவரின்ர குடும்ப உறுப்பினர், நெருங்கின தொடர்பில் இருந்த சொந்தக்காரர், சிநேகிதர் எல்லாரும் 14 நாள் கட்டாயம் தனிமைப்படுத்தப்பட வேணும். 14 ஆவது நாள் அவை எல்லாருக்கும் பி.சி.ஆர். பரி சோதனை செய்ய வேணும்; அது தானே முறை. ஆனா இப்ப அப்பிடி ஒரு நடைமுறை இருக்குதா எண்டு சந்தேக மாத்தான் இருக்கு.

ஏனெண்டால் இப்ப ஒராளுக்கு கொரோனா பொசிட்டிவ் எண்டு வந்திட்டால், உடன 'பி.எச்.ஐமார்' வீட்டை வந்து சிவப்பு நோட்டிசை மட்டும் ஒட்டிட்டு போகினம். அதுக்கு பிறகு அந்த வீட்டுப்பக்கம் ஆரும் (பி.எச்.ஐ உட்பட )எட்டியும் பாக்கி றேலையாம். பிறகு இரண்டு கிழமையால வீட்டுக் காரருக்கு கோல் அடிச்சு 'வீட்டில இருந்து ஆரும் ஒராள் மட்டும் வாங்கோ டெஸ்ட் பண்ண' எண்டு சொல்லினம். அப்பிடி டெஸ்ட் எடுக்க போனவருக்கு கொரோனா இல்ல எண்டா குடும்பத்தில இருக்கிற ஒருத்தருக்கும் கொரோனா இல்லையெண்டு முடிவு செய்து, அவையின்ர தனிமைப்படுத்தலில் இருந்து 'ரிலீஸ்' செய்யினமாம். சில வேளை அப்பிடி டெஸ்ட் பண்ண போற ஆளுக்கு பொசிட்டிவ் எண்டால், அவர் மட்டும் வீட்டில போய் தனிமையில இருக்க வேணும். மற்றவை வெளியில திரியலாம்.

அதாவது நெகட்டிவ் எண்டால் ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம் எண்ட மாதிரி, ஒராளுக்கு இல்லையெண்டா குடும்பத்துக்கே கொரோனா இல்லை எண்டும், ஒராளுக்கு பொசிட்டிவ் எண்டால் மற்றவைக்கும் பொசிட்டிவ் எண்டு அர்த்தமில்லை எண்டும் 'புத்தி சாலித்தனமா' முடிவெடுக்கினம். இது தான் இப்ப பரவலா நடக்குது. சுகாதாரத்துறையின்ர மேலிடமும் இதைப் பற்றி கண்டுகொள்ளுறேலைப்போல.

ஒரு ஆளுக்கு கொரோனா அறிகுறி இருந்தால் அது கொரோனாவோ இல்லையோ எண்டு அறிய பி.சி.ஆர். எடுக்கப் போறது வழமைதானே. அப்பிடி டெஸ்ட் பண்ணச் சொல்லித்தானே அரசாங்கமும் சொல்லுது. ஆனால் எங்களுக்கு கொரோனா இருக்கோ இல்லையோ எண்டு பி.சி.ஆர். எடுக்க 'எம்.ஓ.எச்' க்கு போனா,

இங்க டெஸ்ட் பண்ண ஏலாது எண்டு எரிஞ்சு விழுந்து கலைக்கினமாம். சரி அங்கதான் எடுக்காமல் கலைக்கினம் எண்டிட்டு, அப்பிடியே ஹொஸ்பிட்டலுக்குப் போனால் "10 பேருக்கு மேல டெஸ்ட் பண்ண ஏலாது" எண்டு அங்கையும் திருப்பி விடுகினம். அப்பிடி எல்லாருக்கும் முன்னால போய் ஒவ்வொரு நாளும் பி.சி.ஆர். எடுக்கிற அந்த 10 பேர் யார் எண்டுதான் பட்சிக்குத் தெரியுதில்லை. இதெல்லாம் பிரதேச மட்ட ஆஸ்பத்திரிகளில தான் கனக்க நடக்குது. ஆஸ்பத்திரியிலயும் எடுக்க ஏலாது எண்டால் எங்கதான் நாங்கள் போய் பி.சி.ஆரோ அன்டிஜெனோ எடுக்கிறது? எண்டு சனம் கேக்கிறதிலையும் நியாயம் இருக்கெல்லோ.

இதேபோலதான் சின்னப் பிள்ளைகளுக்கு ஏலாம இருந்தால், பக்கத்தில இருக்கிற ஆஸ்பத்திரிக்கு போனா லும் இதே கதை தானாம். "10வயசுக்கு உட்பட்ட ஆக்களுக்கு டெஸ்ட் பண்ணுறேலையாம்."

இதைப் பற்றி 'பி.எச்.ஐ' மாரிட்ட கேட்டால், "பெரியாஸ்பத்திரிக்கு போய் பி.சி.ஆர் எடுங்கோ. எங்களுக்கு ஓடர் போட்டிடாங்கள் .நாங்கள் அதை மீறி நடக்கேலாது" எண்டுகினம். எல்லாத்துக்கும் பெரியாஸ்பத்திரிக்கு போக ஏலுமோ? எண்டு ஒருத்தரும் பிரக்டிக்கலா யோசிக்கினம் இல்லையே. ஆனால் ஊரில யாராவது செத்துப்போனால் விழுந்தடிச்சு போய், டெஸ்ட் பண்ணுகினம். ஆனால் உயிரோட இருக்கிற ஒரு ஆள் போய் கெஞ்சி மண்டாடினாலும் மனிசனா மதிக்கினமில்லை.

டெஸ்ட் பண்ணினாத் தானே ஊரில கொரோனா கூடுதா? குறையுதா? எண்டு தெரியும். பரிசோதனை நடவடிக்கையை பகுதி பகுதியா நிப்பாட்டிட்டு கொரோனா குறையுது எண்டால், என்ன அர்த்தம் எண்டு தெரியேல்லை. அதிகாரிகள் அறிக்கை மட்டும் விட்டுக்கொண்டு இருக்கினம். வெளில என்ன நடக்கிது எண்டு எட்டிக்கூட பாக்க விரும்பிறேலைப் போல.

சில 'பி.எச்.ஐ' மார் கொரோனாவைக் கட்டுப்படுத்த உயிரைக் குடுத்து வேலை செய்தவை. ஆனா இப்ப அவையும் ஏனோதானோ எண்டு திரியினம் கேட்டால், ஏரியாவுக்க கட்டுப்படுத்தி என்ன செய்யிறது? மற்ற ஏரியாவில இருந்து இஞ்ச ஆக்கள் வராமலோ இருக்கினமோ? எவ்வளவு கஷ்டப்பட்டும் ஒரு பிரியோ சனமுல்லை. அதுதான் கைவிட்டிட்டம். எண்டு சலிப்பா சொல்லுகினம்...!



- பட்சி

## சந்தேகநபரைத் தெரிந்தால் 25 லட்சம் ரூபா சன்மானம்

கொழும்பு, ஒக்.29

துப்பாக்கிச்சூட்டுச் சந்தேகநபர் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு 25 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லேரியா மீகஹவத்தையில் பொலிஸாரைப்போன்று வேடமணிந்து வீடொன்றுக்குள் புகுந்த இருவர் அங்கிருந்தோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயங்களுடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பிரதான சந்தேகநபராக பொன்னம் பெரும ஆராச்சிகே தொன் தனுஸ் புத்திக நொஹான் ஜிலே என்ற 30 வயதுடைய நபரே தேடப்பட்டு வருகின்றார்.

அவரது அடையாள அட்டை இலக்கம் **911854481V** என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சந்தேகநபர், முல்லேரியா, உடுமுல்ல, மாலபே ஆகிய பகுதிகளில் வசித்து வந்துள்ளார். இரு கைகளிலும் தோள்பட்டை முதல் மணிக்கட்டுவரை பச்சை குத்தியுள்ளார்.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தோர் 0718591727, 0777370360, 0718592279 ஆகிய இலக்கங்களுடன் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர், மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவு பணிப்பாளர் ஆகியோரைத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஒ-4)

# சிங்கள – பௌத்தத்துக்கு ஏற்ப நாட்டை மாற்றுவதற்கு முயற்சி!


## 'ஒரு நாடு ஒரு சட்டம்' தொடர்பான செயலணிக்கு விக்னேஸ்வரன் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 29

**வட மாகாணத் தமிழ் மக்களுக்கு தேசவழமை என்ற ஒரு சட்டம் டச்சுக் காலத்தில் இருந்து, சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றது. 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறும் பொழுது தற்போது வலுவில் இருக்கும் றோமன் டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம், கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாகக் கணித்து ஒற்றைச் சட்டத்தைக் கொண்டு வரவே இந்த செயலணி உருவாக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன்.**

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஜனாதிபதி பல்வேறு குற்றவாளிகளை இதுவரை தனது அதிகாரங்களைப் பாவித்து சிறைகளில் இருந்து வெளிக்கொண்டு வந்து மன்னிப்பு அளித்துள்ளார். உதாரணத்துக்கு இரண்டு நீதிமன்றங்களால் கொலைக்குற்றவாளியாக காணப்பட்ட ரத்நாயக்க என்ற சிப்பாய் அவர்களுள் ஒருவர், கொலைக் குற்றவாளியாகக் காணப்பட்ட துமிந்த சில்வா மற்றொருவர். அண்மையில் கரன்னகொட என்ற முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராக இருந்த குற்றச் சாட்டுக்கள் கைவாங்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். போர்க்காலத்தின் போது பல குற்றங்களைப் புரிந்த இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களைக் கொண்டுவந்து அவர்களுக்கு அரச உயர் பதவிகள் கொடுத்துள்ளார். ஆகவே குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறையில் இருந்த ஞானசார தேரரை தற்போது தமது ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக்கியமை எனக்கு வியப்பைத் தரவில்லை. அவருடைய அந்த செயலணியில் அங்கம்பெறும் அங்கத்தவர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்களும் ஒரு சில முஸ்லிம்களும் ஆவர். வட மாகாணத் தமிழ் மக்களுக்கு தேசவழமை என்ற ஒரு சட்டம் டச்சுக் காலத்தில் இருந்து, சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறும் பொழுது தற்போது வலுவில் இருக்கும் றோமன் டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம், கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகிய வற்றைப் புறக்கணித்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாகக் கணித்து ஒற்றைச் சட்டத்தைக் கொண்டு வரவே இந்த செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறும் பொழுது இந்த நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை சிங்கள மாகாணங்



களுடன் சேர்த்து அவை சிங்கள பௌத்தத்துக்குள் அடங்கியவை என்று எடுத்துக் காட்டவே இந்த இன ரீதியான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன். இந்த நாடு "சிங்கள பௌத்த நாடு" என்றும், அதன் அடிப்படையில் இந்த நாட்டை ஒரு சிங்கள நாடாக அடையாளப்படுத்த வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள். சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தச் செயலணியின் குறிக்கோளாகும். தமிழர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி. சகல இனமக்களும் இவ்வாறான தான்தோன்றித்தனமான சிங்கள பௌத்த வெறிகொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு - என்றுள்ளது. (ம)

## இரண்டு பிள்ளைகள் கொலை இலங்கைத் தாய் சடலமாக மீட்பு

கொழும்பு,ஒக்.29

இத்தாலியில் இரண்டு பிள்ளைகளைக் கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் இலங்கையைச் சேர்ந்த தாயொருவர் அங்குள்ள ஆறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


இத்தாலியில் வெரோனா நகரத்திலுள்ள பெண்கள் காப்பகத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட 33 வயதுடைய சச்சித்ரா நிசன்சலா பெர்னாண்டோ தேவ்த்ரா மஹா வடுகே என்பவர், தனது சாபதி (11 வயது) மற்றும் சாந்தனி (03 வயது) மகள்களுடன் இத்தாலியில் வெரோனா நகரில் வசித்து வந்துள்ளார். வெனிஸ் சிறுவர் நீதிமன்ற உத்தரவின் கீழ் இரண்டு பிள்ளைகளும் அவர்களின் தந்தையிடமிருந்து பிரிந்து தாயுடன் வசித்து வந்துள்ளனர். இந்த நிலையில் குறித்த இரு பிள்ளைகளையும் தாயார் கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ-4)

# 20க்கு கை உயர்த்திய முஸ்லிம் எம்.பிக்கள் ஒரே நாடு ஒரே சட்டத்துக்கும் கை உயர்த்துவர்

## இம்ரான் மஹ்றூப் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 29

'ஒரே நாடு, ஒரே சட்டம்' இந்த நாட்டில் சட்டமூலமாகும் போது 20க்கு கை உயர்த்தியோர் அதற்கும் கை உயர்த்துவர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கடைசி நிமிடம் வரை ஐக்கிய மக்கள் சக்தியோடு கூடிக்குலாவி ஒற்றுமையாக இருந்தவர்கள் திடீரென அந்தக் கட்சியின் நம்பிக்கைக்கும் முஸ்லிம் சமுகத்தின் நம்பிக்கைக்கும் துரோகம்செய்து 20க்கு கை உயர்த்தினார்கள். இதன் மூலம் சமூகத்துக்கு இது வரை அவர்கள் பெற்றுக் கொடுத்ததென்ன?.

20க்கு வாக்களித்ததன் மூலம் இப்போது அரசின் பக்கம்தானே இவர்கள் உள்ளார்கள். முன்பொரு தடவை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சொன்னதுபோல கண்ணைத் திறந்து கொண்டு குழியில் விழுந்தவர்கள் தான் 20க்குக் கை உயர்த்தியோர். இவர்களுக்கு தேவையானவை வழங்கப்பட்டாகி விட்டது. இதனால்தான் அரசின் முக்கிய விடயங்களில் இப்போது இவர்கள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றார்கள். எனவே, 'ஒரே நாடு ஒரே சட்டம்' வாக்கெடுப்புக்கு வருகின்றபோது இவர்களது ஆதரவை எப்படிப் பெறுக்கொள்வது என்ற மந்திரம் அரசுக்குத் தெரியும். அதனால் அதற்கு ஆதரவாகவும் இவர்கள் வாக்களிப்பார்கள் -என்றுள்ளது. (ம)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்ப்பாணம் மாநகரசபைக் குட்பட்ட வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

மாநகரசபையின் 9,10 மற்றும் 11 ஆம் வட்டாரங்களுக்கான பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் இதுவரை காலமும் செலுத்த வேண்டியுள்ள சோலைவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலைவரி, தண்ணீர் வரி போன்றவற்றையும் செலுத்த முடியும். (ஜ)

# தடைசெய்யப்பட்ட மரங்கள் யாழில் அதிகமாகத் தறிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

அரசால் தறிப்பதற்கு தடை செய்யப்பட்ட 3 மரங்கள் குடாநாட்டில் அதிகளவில் வெட்டி வீழ்த்தப்படுகின்றன என்று யாழ்ப்பாண வனபரிபாலனப் பகுதி வன உத்தியோகத்தர் தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2012 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் படி பலாமரம், ஈரப்பலாமரம் மற்றும் பெண்பனை மரம் ஆகிய மூன்றுமரங்களும் தறிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக குறித்த 3 மரங்களும் அதிகளவில் தறிக்கப்பட்டு வருகின்றன.

சிற்பாலயங்களின் தேவைக்காக அதிகளவு பலா மரங்கள் தறிக்கப்படுகின்றன.


முறையான அனுமதியின்றி குறித்த மரங்களைத் தறிக்கின்ற பட்சத்தில் அவர்கள் வனபரிபாலன திணைக்களத்தால் கைது செய்யப்படுவதோடு, அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். - என்றார். (ஐ-125)

## பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக் 29

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 இன் II ஆம் அரையாண்டு மற்றும் தேசிய தொழில் தகைமை மட்டம் 6 இன் I ஆம் அரையாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறித்த பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்ப படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பிரிவில் பெற்று, எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ய)



## வாகன விபத்தில் எருமைகள் இறப்பு


முல்லைத்தீவு, ஒக்.29

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினரின் பிக்கப் வாகனம் மோதியதில் இரண்டு எருமை மாடுகள் உயிரிழந்துள்ளன.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் வேகமாக வந்த படையினரின் பிக்கப் வாகனம் வீதியில் நின்ற எருமை மாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இரண்டு எருமை மாடுகள் உயிரிழந்துள்ளதுடன் படையினரின் பிக்கப் வாகனத்தின் முன்பக்கம் கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)

## அரியணை ஏற்றிய எம்மை மறவாதீர்!

### கோத்தாவிடம் விமல் இடித்துரைப்பு



கொழும்பு, ஒக். 29

"கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதிக் கதிரையில் அமர வைத்ததில் அரசின் பங்காளிக் கட்சிகளுக்குப் பெரும் பங்கு உண்டு. ஆனால், அதை மறந்து ஜனாதிபதி செயற்படுகின்றார் போல் தென்படுகின்றது."

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பொதுஜன முன்னணியில் உள்ள சிலர், ஜனாதிபதி தவறான முடிவுகளை எடுக்க வழிசமைக்கின்றனர்.

ஜனாதிபதி நாட்டின் தலைவர். எனவே, அவர் நாட்டு மக்களின் நலன் கருதியே முடிவுகளை எடுக்க வேண்டும். அதைவிடுத்து கட்சி நலன் சார்ந்து முடிவுகளை எடுக்கக்கூடாது. அது இறுதியில் ஆட்சிக்குத்தான் பாதகமாக அமையும்.

நாட்டு மக்களின் எதிர்ப்புக்களில் இருந்து அரசைப் பாதுகாக்கவே பங்காளிகளாகிய நாம் விரும்புகின்றோம். அரசை வீழ்த்துவது எமது நோக்கமல்ல. இதை ஜனாதிபதி உணர்ந்து செயற்பட வேண்டும்" -என்றார். (த-22)

## சுகாதார நடைமுறைகளை மீறிய 250 பேருக்கு எதிராக நடவடிக்கை

வவுனியா, ஒக்.29

சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறிய 250 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த மாதம் முதல் நேற்றுமுன்தினம் வரையான காலப் பகுதியில் முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளிகள் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

தொடர்ந்தும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தேவை இன்றி நகரில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும், சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளை பொதுமக்கள் பின்பற்றி நடக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)

## பயிர்களைச் சேதப்படுத்திய கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

அச்சுவேலி, ஒக்.29

பயிர்களைச் சேதப்படுத்திய 5 கட்டாக்காலி மாடுகள் வாதரவத்தை கமக்கார அமைப்பினரால் பிடிக்கப்பட்டுள்ளன.

உரிமையாளர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என்று கமக்கார அமைப்பின் செயலர் க.சுந்தரவேல் அறிவித்துள்ளார். உரிய காலப்பகுதியில் உரிமை கோரப்படாத மாடுகள் புத்தூர் கமநல சேவை நிலையத்தின் ஊடாக ஏல விற்பனை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## முஸ்லிம்கள் வெளியேற்றம் இன்று நினைவுகூரல்

வவுனியா, ஒக் 29

வட மாகாணத்தின் "முஸ்லிம்களின் 31 வருட அவல நிலையினை நினைவுகூரல் மற்றும் இணைய சஞ்சிகை வெளியீட்டு" நிகழ்வு இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

யாழ். ஒஸ்மானியக் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ய-110)

## சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க மாத்தளனில் காவலரண் அமைக்கவும்

### கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஒக்.29

கரைதுறைப்பற்று அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் தொடர்கின்ற மணல் அகழ்வைத் தடுக்க மாத்தளன் சந்தியில் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்த காவலரண் அமைக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் தொடர்கின்ற மணல் அகழ்வைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை. மணல் அகழ்வு தொடருமானால் இந்தப் பிரதேசத்தில் உவர்ப் பரம்பல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். நிலத்தடிநீர் பாதிக்கப்படும். ஏற்கனவே அயல் கிராமங்களான புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரம், இரணைப்பாலை கிராமங்கள் உவர்ப் பரம்பல் ஏற்பட்டு, மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதே நிலைமை அம்பலவன்பொக்கணை கிராமத்திலும் ஏற்படாமல் இருப்பதற்கு மணல் அகழ்வு தடுக்கப்பட வேண்டும் -என்றார். (ஐ-13)

## நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.29

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினத்தின் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் மங்களம் மணிசேகரன் தலைமையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சூம் இணைய வழியூடாக இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மகாஜன சிற்பியின் மகள் திருமதி வி.ஜெயபவானி, சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஆசிரியர் கனகசுந்தரம் புவனசுந்திரா, மயில்வாகனம் சூரியசேகரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையை Gobecast தொழில்நுட்பத் திட்ட முகாமையாளர் ஆற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மீன் வியாபாரம் என்ற போர்வையில் விசுவமடுவில் கசிப்பு விற்பனை

முல்லைத்தீவு, ஒக்.29

மீன் வியாபாரம் என்ற போர்வையில் மீன் பெட்டியில் 55 போத்தல் கசிப்பு கொண்டு சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு விசுவமடு பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் மீன் வியாபாரம் என்ற போர்வையில் 55 போத்தல் கசிப்பை 6 பைகளில் கட்டி மீன்களுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் இவர் கைது செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்பில் முக்கிய கசிப்பு வியாபாரிகளிடம் கைமாற்றுவதற்காக கொண்டு செல்லப்பட்டதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-19)

## மோட்டார் குண்டு மீட்பு

கொடிகாமம், ஒக்.29

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் இருந்து மோட்டார் குண்டு ஒன்று கொடிகாமம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டது.


கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி கடற்கரைப் பகுதியில் குண்டு ஒன்றை அவதானித்த பிரதேச மக்கள் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். நீதிமன்ற அனுமதி பெற்று அதிரடிப்படையினரின் உதவியோடு குண்டை செயலிழக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ-125)

உலக பாரிசவாத தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த கட்டுரை பிரசுரமாகிறது.

மருத்துவர்
அஜந்தா கேசவராஜ்

# பாரிசவாதம்

## நோய்நிலைபற்றி அறிதலும் பதற்றங்களைத் தவிர்த்தலும்




பாரிசவாத நோயானது தற்போது கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள கால கட்டத்தில் அதிகரித்துவரும் ஒரு தொற்றாநோயாகும். பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரவியல் அடிப்படையில் பார்க்கின்றபொழுது பக்கவாத நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2 தொடக்கம் 3 மடங்கு அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது.

பாரிசவாத நோயானது மருத்துவ ரீதியில் குணப்படுத்தக் கூடிய நோயாக இருப்பதாலும் பாரிசவாத நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் இந்த நோய் பற்றிய தகவல்களை அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகும். பெரும்பாலும் தங்களுக்கு பாரிசவாத நோய் ஏற்படும்போதோ அல்லது தமது குடும்பத்தினருக்கு ஏற்படும்பொழுது மட்டுமே இந்த நோய்பற்றி அறிந்து கொள்வதில் பலர் ஆர்வம் செலுத்துகின்றனர். பொதுவாக நோக்குமிடத்து இந்நோய் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ள காரணத்தினால் தகுந்த நேரத்தில் சிகிச்சை வழங்கப்படாத நிலை இன்னமும் காணப்படுகின்றது. எனவே இந்த நோய் தொடர்பாக ஏற்கனவே அறிந்திருப்பின் நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உருவாகக்கூடிய பதற்ற நிலையைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

எமது மூளையின் சில பகுதிகளுக்குரிய குருதி வழங்கலில் இடையூறு ஏற்படுவதால் உருவாகும் நிலையே பாரிசவாதம் எனப்படும். இதேபோன்ற நிகழ்வு இருதய நாடிகளில் ஏற்படும்பொழுது இதனை மாரடைப்பு என்று நாம் அழைக்கின்றோம். இதைவிட சில சந்தர்ப்பங்களில் இருதயம் மற்றும் இருதயத்திலிருந்து வெளியேறும் பெரிய குருதிக் குழாய்களில் பல்வேறு காரணங்களினால் குருதிக் கட்டிகளும் உருவாகலாம். இந்தக் கட்டிகள் பொதுக்குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து மூளைக்குரிய நாடிகளினூடாக செல்லும் பொழுது குருதிக்குழாய்களிலேயே தங்கி விடுவதனால் திடீரென குருதிச் சுற்றோட்டம் தடைப்படுகின்றது. மேலும் சில சந்தர்ப்பங்களில் மூளை நாடிகள் வெடித்து இரத்தப் பெருக்கும் ஏற்படலாம். இதன் காரணமாக மூளையின் தொழிற்பாட்டில் திடீர் ஸ்தம்பித நிலை ஏற்பட்டு பாரிசவாதத்தின் குணங்குறிகள் ஏற்படுகின்றன. இரத்தப்போக்கின் காரணமாக ஏற்படும் பாரிசவாதமானது குருதியுறைவினால் ஏற்படும் பாரிசவாதத்தை விட தீவிரமானதும் ஆபத்தானதுமாகும்.

கொரோனாத் தாக்கத்தின் ஒரு கட்டத்தில் குருதியானது இரத்த நாடிகளிலும் நாளங்களிலும் கட்டிபட ஆரம்பிக்கும். இவ்வாறான செயற்பாடு இருதயத்தின் இடதுபுற அறைகளில் அல்லது மூளைக்கு குருதியை எடுத்துச் செல்லும் பெரிய அல்லது நடுத்தர அளவுடைய நாடிகளில் நிகழும்பொழுது மூளையின் பல்வேறுபட்ட பாகங்களுக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டிய குருதி பகுதியாகவோ அல்லது முற்றாகவோ தடைப்படுகின்றது. இதன் காரணமாகவே அண்மைக்காலமாக அதிகளவு பக்கவாத நோயாளர்கள் அவதானிக்கப்படுகின்றனர்.

தற்காலிக பாரிசவாதம் என்பது பாரிசவாதத்துக்குரிய குணங்குறிகள் ஏற்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் இயல்புநிலையை அடைவதைக் குறிக்கும்.




இதற்கு குருதிக்குழாய்களில் ஏற்படும் நிரந்தரமற்ற குருதியடைப்பு ஒரு காரணமாக அமையலாம். இதற்கு குருதிக் குழாய்களில் ஏற்படும் நிரந்தரமற்ற சுருக்கம் அல்லது குருதிக் குழாய்களில் ஏற்படும் சிறிய குருதிக்கட்டிகள் காரணமாக இருக்கலாம்.

இதன்மூலம் தற்காலிக பார்வையின்மை, பேச்சில் பாதிப்பு மற்றும் உடலின் ஒரு பக்கத்தில் பலவீனம் போன்றவை ஏற்பட்டாலும் இதனால் பாரதூரமான இயலாமை ஏற்படுவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. இதற்குரிய குணங்குறிகள் தற்காலிகமானவையாக இருப்பினும் இவை ஆபத்தான பாரிசவாதம் ஏற்படப் போகின்றது என்பதற்கான பொதுவான ஒரு முன்னெச்சரிக்கையாகவும் விளங்குகின்றது.

பாரிசவாதத்துக்குரிய சிகிச்சையானது நரம்பியல் நிபுணர் உள்ளடங்கிய விசேட பல்துறை வைத்திய நிபுணர் குழாமினால் வழங்கப்படுகின்றது. இது சார்ந்த வசதிகள் மற்றும் பயிற்றப்பட்ட நிபுணர்கள் சேவைக்ள் என்பவை இலங்கையில் இப்பொழுது வடக்கு உட்பட அனைத்துப் பாகங்களிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பாரிசவாதம் இனங்காணப்பட்டு 4-5 மணி நேரத்துக்குள் நோயாளியை உரிய மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சையளிக்க இடமளிப்பதன் மூலம் இந்நோயின் வீரியத்தை முற்றாகவோ அல்லது இயலுமானவரை குறைத்துக் கொள்ளமுடியும். ■

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

*மின்னல்...*

இந்தச்சம்பவம் முல்லைத்தீவு துணுக்காய் தேராங்கண்டல் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. தேராங்கண்டல் அ.த.க. பாடசாலையின் தரம் 09 மாணவனான சசிக்குமார் ஆதவன் (வயது - 14) என்பவரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தேராங்கண்டல் குளப் பகுதியில் இன்னொருவருடன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் மாணவன் உயிரிழந்துள்ளார். மற்றையவர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப் பட்டது. (கு-13)

*சுற்றாடல்...*

ஆளுநர் ஜீவன் தியாகராஜா கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதற்கான வேலைத்திட்டத்தை உடன் ஆரம்பிக்கவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். கழிவகற்றல், கால்வாய்களில் வெள்ளம் ஓடுவதற்கு தடையாகவுள்ளவற்றை அகற்றுதல், காணிகள், வீதிகளைத் துப்புரவாக வைத்திருத்தல் உள்ளிட்ட துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு தத்தம் ஆளுகைப் பகுதிகளை தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். சுற்றாடல் கண்காணிப்புப் பொலிஸாரை அனுப்புவதற்கு முன்னர் தவிசாளர்கள் சகல பகுதிகளையும் தூய்மையாக்கிவிடல் வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவை ஆளுநர் பிறப்பித்துள்ளார்.

மழை காலம் ஆரம்பித்துள்ளமையால், டெங்கு உட்பட தொற்று நோய்களின் ஆபத்திலிருந்து விலகியிருக்கும் வகையில் செயற்படவேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (கு)

*சிறுபான்மையினரை...*

யத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பது தொடர்பாக ஞானசார தேரர் தலைமையில் 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற பல மொழிகள், பல மதங்கள், பல கலாசாரங்கள் கொண்ட வேறுபட்ட இனங்கள் வாழக்கூடிய நாட்டிலே பல்வேறு விதமான சட்டதிட்டங்கள் இருக்கின்றமை இயல்பானது.

இலங்கையிலும்கூட யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம், கண்டியச் சட்டம், ஷரிஆ சட்டமென ஒவ்வொரு சட்டங்கள் காணப்படுகின்றன. இவை நீண்டகாலமாக வழிவழியாக வந்த சட்டங்களே.

இவ்வாறான சூழ்நிலையில் தான் ஜனாதிபதியினால் 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பதன் அடிப்படையிலேயே இலங்கையின் மிக மோசமான இனவாதி எனக் கூறப்படும் ஞானசார தேரரின் தலைமையில் ஒரு செயலணி உருவாக்கப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு, செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத் தீர்த்தக்கேணியில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தவர். நீதிமன்றத்தின் கட்டளைகளை ஏற்க மறுத்ததன் காரணமாக அவரை நீதிமன்றம் தண்டித்து சிறை தண்டனை வழங்கி இருந்தது. அதன் பின்பு பொதுமன்னிப்பில் விடுதலையானார்.தமிழ், முஸ்லிம் இனங்களை, அவர்களது கலாசாரங்களை, சட்டதிட்டங்களை, நடைமுறைகளை இல்லாமற் செய்வதென்பது கண்டிக்கப்பட வேண்டியதுடன் உடனடியாக நிறுத்தப்படவும் வேண்டும். இதற்காக தமிழ், முஸ்லிம்கள் மாத்திரமல்லாது, சிங்களத் தரப்பில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும். ஏனைய இனங்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமைகளை மறுதலித்து ஒரு ஜனநாயக விரோதச் செயற்பாடாகத் தான் இந்தச் செயலணி உருவாக்கம் இருக்கின்றது என்பதை நாம் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (கு-20)

*கோத்தாவால்...*

இல்லாமற்போகும் நிலைமை உருவாகும்."

இவ்வாறு, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தற்போதுதான் நாட்டு மக்களுக்கு சிறப்பாக செய்யப் போகின்றார். அதற்கு இதுதான் சரியான நேரம் என அவர் உணர்ந்துள்ளார். 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசைக் கவிழ்க்க கோத்தாபய ராஜபக்ச உட்பட இந்தக் குழுவினர் இனவாதம் மற்றும் மதவாதத்தைப் பயன்படுத்தினர். இனங்களுக்கிடையில் ஆத்திரத்தைத் தூண்டினர். சூழ்ச்சி மற்றும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தினர். இவற்றைப் பயன்படுத்தியே 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசைக் கவிழ்த்தனர்.

இரண்டு வருடங்களின்பின்னர் தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நித்திரையில் இருந்து விழித்தவர் போல், கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் 'ஒரு நாடு ஒரு சட்டத்தை' உருவாக்க ஜனாதிபதி செயலணிக் குழுவை நியமித்துள்ளார்.

நாட்டில் உள்ள படித்த புத்திசாலி மக்களுக்கு இதனை நாங்கள் விளக்கப்படுத்த வேண்டியதில்லை. எதற்காகத் தயாராகி வருகின்றனர்? நாட்டை எங்கு கொண்டு செல்லப் போகின்றனர்? கடந்த இரண்டு ஆண்டுகளில் 'ஒரு நாடு ஒரு சட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டதை நாங்கள் நன்றாகப் பார்த்தோம். ஜனாதிபதி இவ்வாறு நாட்டை எந்தத் திசை நோக்கி கொண்டு செல்கின்றார் என்பதை மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும்"- என்றார். (கு-22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தக்காளிச்சட்னியும் இரத்தமும்!

ஒரேநாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சட்டம் எப்படி ஆக்கப்பட்டிருப்பினும் அதன் பிரயோகம் என்னவோ பெரும்பான்மையினத்தவருக்கு ஒன்றாகவும் சிறுபான்மையினத்தவருக்கு வேறொன்றாகவுமே இருந்து வருகின்றது.

தெற்கில் வெற்றிக் கொண்டாட்டத்தை கட்டுப்படுத்தாத கொரோனாத் தனிமைப்படுத்தல் சட்டம், வடக்கில் நினைவேந்தல்களை தடுத்தமையை நாம் கண்ணூடாகப் பார்த்திருக்கின்றோம்.

இறுதிப் போரில் அரங்கேறிய போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கு தமிழர் தரப்பு சர்வதேச விசாரணையைக் கோரி வருகின்றது. தமிழர் தரப்பு சர்வதேச விசாரணையைக் கோருவதற்கு காரணம் உண்டு. இலங்கையின் நீதி முறைமை எவ்வளவு தூரம் தமிழ் மக்கள் விடயத்தில் நீதியாக நடந்திருக்கின்றது என்பது முதலாவது கேள்வி. போரின் போது குற்றமிழைத்தவர்களாக சுட்டிக்காட்டப்படும் படையினரை, அதே அரசின் நீதிமுறைமை விசாரிப்பது என்பது எவ்வளவு தூரம் சுயாதீனமானது? நம்பகத்தன்மையானது? சர்வதேச – சுயாதீன விசாரணை ஊடாகவே நீதி நிலைநாட்டப்படும் என்பது தமிழர் தரப்பின் நம்பிக்கை.

அதேபோன்று இலங்கை அரசுடன், இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தலைவர்கள் பல தடவைகள் பேச்சு நடத்தியிருக்கின்றனர். ஒவ்வொரு தடவையும் சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டமையே வரலாறாகிக்கிடக்கின்றது. இதனாலேயே பேச்சின் போதும் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தேவை என்று தமிழர்கள் வலியுறுத்துகின்றனர்.

போர்க்குற்ற விசாரணையின்போது சர்வதேச விசாரணைக் கோரிக்கையையும், இனப்பிரச்சினைத்தீர்வுக்கான மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தையும் சிங்கள தேசமும் அதன் ஆட்சியாளர்களும் எப்போதுமே நிராகரித்துத்தான் வந்திருக்கின்றார்கள். ஒப்புக்கூட அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. நாட்டின் சுயாதீனத்தையும், இறைமையையும் முன்னிலைப்படுத்தி இதை அவர்கள் தூக்கிக் கடாசுகின்றார்கள்.


எந்த சிங்கள – பௌத்த பேரினவாதம் தமிழர்களின் மூன்றாம் தரப்பின் – சுயாதீனத் தரப்பின் – கோரிக்கையை தூக்கிக் கடாசியதோ அதே தரப்பு இப்போது, மூன்றாம் தரப்பின் அல்லது சுயாதீனத் தரப்பின் சோதனைக்கு இணங்கியிருக்கின்றது.

சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சேதன உரத்தில் பக்றீரியா இருப்பதாக இலங்கை தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை மூலம் சோதனை செய்யப்பட்டதில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து உரத்தை சீன நிறுவனம் மீளக் கொண்டு செல்ல வேண்டும் என்று இலங்கை அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் உரத்தைக் கொண்டு வந்த சீன நிறுவனம், இலங்கையின் பரிசோதனை முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மூன்றாம் தரப்பு ஊடாக அதனை சோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளது. இலங்கையிலுள்ள சீனத் தூதரகமும் தலையிட்டு, இலங்கை அரச பிரதிநிதிகளைச் சந்தித்து மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் மூன்றாம் தரப்பு ஒன்றின் ஊடான சோதனைக்கு இலங்கையும் இணங்கியது. இந்த விடயத்தில் விவசாய அமைச்சர் புதுக் கருத்து ஒன்றை முன்வைத்துள்ளார். இலங்கைக்கு என்று புதிதாக உற்பத்தி செய்யப்படும் சேதன உரத்தையே மூன்றாம் தரப்பு ஒன்றின் ஊடாக சோதனைக்கு உட்படுத்த இணங்கினோம் என்று குறிப்பிட்டுள்ளார்.


எது எப்படியிருந்தபோதும், மூன்றாம் தரப்பு அல்லது சுயாதீனத் தரப்பு ஒன்றின் சோதனைக்கு இலங்கை இப்போது இணங்கியிருக்கின்றது. இப்போது இலங்கையின் இறைமை, சுயாதீனம் தொடர்பில் அரசு வாய் திறக்கவேயில்லை. போர்க்குற்றமென்றால் குருதி வடிவது போல குதிப்பதும்,சீன உரத்துக்கு தக்காளிச் சட்னியாக மசிந்து போவதும்தான் இலங்கையின் 'ஒரே நாடு, ஒரே சட்டம் போலும்'…!




# சீனாவுக்கு பாராட்டு தெரிவித்த மஹிந்த!

**கொழும்பு, ஒக்.29**

**இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச பாராட்டுத் தெரிவித்துள்ளார்.**



பிரதமருக்கும், சீனத் தூதுவர் சீ.ஷென்ஹொனுக்கும் இடையே அலரி மாளிகையில் நடந்த சந்திப்பிலேயே பிரதமர் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு வாழ்த்து தெரிவித்த சீனத் தூதுவர் சீ.ஷென் ஹொான், அதற்கு சீன அரசின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

(எ-இ)

# ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தை சமமாக நடைமுறைப்படுத்துங்கள்

## 'ஒரு நாடு ஒரு' சட்டம் செயலணிக்கு சாணக்கியன் எம்.பி. கடும் எதிர்ப்பு


கொழும்;பு, ஒக். 29

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்னும் திட்டங்களைக் கைவிட்டு, இருக்கின்ற சட்டத்தை அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துங்கள் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியலமைப்பின் 33ஆம் உறுப்புரையினால், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணி பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இதுவரை உள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்தினாலேயே போதுமானது. இருக்கின்ற சட்டங்களை அனைவருக்கும் சமமாக நடைமுறைப் படுத்துங்கள் என்பதே எமது நிலைப்பாடாகும். ஜனாதிபதிக்கு வேண்டப்பட்டவர்கள், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்களுக்கு ஒரு சட்டமும், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு சட்டமும் என்ற நிலைப்பாடில்லாமல் நேர்மையாகச் சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்றே நாங்கள் கூறியிருந்தோம்.



இன்று மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்காக போராடிவருகின்ற நிலை காணப்படுகின்றது. இன்னும் இரண்டு வருடத்தில் இந்த நாட்டில் பசியினால் மக்கள் உயிரிழக்கும் நிலையேற்ப டும். இவ்வாறான நிலையில் மக்களை திசைதிருப்புவதற்காக போலி யான விடயங்களை செய்யாமல், நாட்டு மக்களின் நலனுக்காக செயற்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்' - என்றார்.

(ம-213)



இயேசு உங்களை நேசிக்கிறார்

# இயேசு நாதர் திரும்ப வருகிறார்!

## இன்று அவர் இரட்சகர்; நாளை அவர் நீதியரசர்!

"சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக அல்லேலூயா."
சங்கீதம் 150:6

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல்;
ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."
2 பேதுரு 3:9

### இயேசு நாதர் திரும்ப வருகிறார்!

சரித்திரத்தைக் 'கிறிஸ்துவுக்கு முன்' (கி.மு.) என்றும், 'கிறிஸ்துவுக்குப் பின்' (கி.பி) என்றும் பிரித்த கிறிஸ்து இயேசுவின் பெயரால் உங்களை வாழ்த்துகிறோம்!

சரித்திரத்தின் நடுநாயகராய்த் திகழும் இயேசு நாதர் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன்னர் இப்பூவுலகில் பிறந்து 33 1/2 ஆண்டுகள் பாவமற்றவராய் வாழ்ந்தார். 'கடவுள் மனிதனாகப் பிறக்கவேண்டும்' என்ற தொன்றுதொட்ட ஏக்கம் இயேசுவில் நிறைவேறியது. அவர் தன்னை 'இறைமகன்' என்று அழைத்தார்.

ஆசியா கண்டத்திலுள்ள பாலஸ்தீன நாட்டில் பிறந்து வளர்ந்த இயேசுவானவர் இறைவனின் அன்பைச் சொல்லாலும் செயலாலும் மக்களுக்கு அறிவித்தார். அவரிடம் வந்த படுபாவிகளைக் கூட மன்னித்தார்; எளியேசருக்கு இரங்கினார்; தள்ளப்பட்டோரை அணைத்துக் கொண்டார்; நோயாளிகளைச் சுகப்படுத்தினார். இவ்விதம் அவர் செய்தது யாவும் மக்களது நன்மைக்காகவே.

இயேசு நாதரின் எளிய போதனைகள் மக்களைக் கவர்ந்தன. திரள் கூட்டம் அவருக்குப் பின் சென்றது. இதனால் அன்றைய மார்க்கத் தலைவர்கள் அவர் மீது பொறாமை கொண்டனர். பொய்யான குற்றச் சாட்டுகளை அவர் மீது சுமத்தினர். முடிவில் ரோமப் பேரரசின் ஆளுநர்களை வசப்படுத்தி இயேசு நாதரைச் சிலுவையில் அறைந்தனர். மக்களுக்கு அருளுரையாற்றி வந்த வேளைகளில் தனது கொடூர மரணத்தைக் குறித்து இயேசு நாதர் ஏற்கனவே முன்னறிவித்திருந்தார். உலகிலுள்ள மக்களின் பாவங்களுக்கான பலியாகவே அவர் இறக்கப் போவதாக விளக்கியிருந்தார் மட்டுமல்ல, இறந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்துவிடுவதாகவும் தமது சீடருக்கு வாக்குப்பண்ணியிருந்தார். அவ்வாறே உயிர் பெற்று 40 நாட்கள் தனது சீடரோடு இருந்து பின்னர் விண்ணகம் சென்றார்.

விண்ணகத்திற்கு இயேசு நாதர் செல்லுமுன் அடிக்கடி சொன்ன முக்கியமான வார்த்தைகள், 'நான் திரும்பவும் வருவேன்' என்பதே. பைபிள் என்றழைக்கப்படும் திருவிவிலியத்தில் இயேசு நாதரின் முதலாம் வருகையைக் குறித்தும், இரண்டாம் வருகையைக் குறித்தும் நூற்றுக்கணக்கான முன்னறிவிப்புகள் (தீர்க்கதரிசனங்கள்) இறைவாக்குகளாய்க் கொடுக்கப்பட்டுள்ளன. அவரது முதலாம் வருகையைக் குறித்த முன்னறிவிப்புகள் யாவும் துல்லியமாய் நிறைவேறின் அப்படியே அவரது இரண்டாம் வருகையைக் குறித்த முன்னறிவிப்புகளும், பைபிளில் எழுதப்பட்டிருக்கிறபடியே, நிறைவேறும்.

இயேசுநாதர் முதலாவது வரும்போது 'இரட்சகராய்' வந்தார். இரண்டாம் முறை வரும்போது 'நீதியரசராய்' வருவார். இன்று அவரை நம்பி, அவரைத் தங்களது வாழ்க்கையில் இரட்சகராய் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இறுதித் தண்டனைத் தீர்ப்பு கிடையாது.

நண்பரே, இவ்வுலகில் பாவமே செய்யாதவர் எவருமில்லை. பாவமே செய்யாது நமக்காகப் பலியான இயேசு நாதர் ஒருவரே நமது பாவங்களை மன்னிக்க முடியும். "இயேசு நாதரே எனது பாவங்களை மன்னியும்" என்று நாம் அவரிடம் நம்பிக்கையோடு வேண்டும் போது அவர் நமது இதயத்தில் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைத் தருவார். எவரும் எதுவும் தரமுடியாத நிம்மதியும் மனசாந்தியும் நமது உள்ளத்தை நிரப்பும். குற்றவுணர்வு பறந்து போகும். இப்படித் தான் நாம் கடவுளின் பிள்ளைகளாக முடியும் இறைவன் நமது இதயத்தில் குடிகொள்வார்.

நீங்கள் கிறிஸ்தவரோ கிறிஸ்தவரல்லாதவரோ, எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும், இயேசு நாதர் உங்களை அன்பாய் அழைக்கிறார். உங்கள் பாவங்கள், பயங்கள், மனக் கவலைகள், வியாதிகள் யாவற்றையும் அவரிடம் மனம் திறந்து சொல்லுங்கள். அவர் உங்கள் கண்ணீரைத் துடைப்பார். உங்களையும் உங்கள் வேலையையும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார். இயேசு நாதரைத் தங்களது ஒரே இரட்சகராக, இதயதெய்வமாக, ஏற்றுக் கொண்டார்களது மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

உங்களுக்குத் தெரிந்த கிறிஸ்தவ நண்பர்களுடன் தொடர்பு கொண்டு பைபிள் வாங்கிப் படியுங்கள். மனதில் இன்னும் உங்களுக்குத் தெளிவு உண்டாகும்.

இயேசு நாதர் திடீரென்று, நாம் எதிர்பாராத நேரத்தில், திரும்ப இவ்வுலகிற்கு வருவார். அவரையே தங்களது பாவம் தீர்க்கும் இரட்சகராகவும், இதய தெய்வமாகவும் வழிபட்டு வாழ்பவர்களை அவர் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார்; மற்றவர்களுக்கு நரகம்தான் என்கிறது திருவிவிலியம் "அவரது சினம் விரைவில் பற்றியெரியும்; அவரிடம் ஒட்டிக் கொள்வோரோ அருள் பெற்றோர்" என்றும் அது கூறுகிறது.

JESUS LOVES YOU இயேசு உங்களை நேசிக்கிறார்

உங்கள் ஆன்மா நித்திய நித்தியமாய் முடிவில்லாது இறைவனோடு ஆனந்தமாய் வாழவேண்டும் என்ற விருப்பத்துடன் தான் இப்பிரசுரம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதைப் பொறுமையாய் வாசித்தற்கு நன்றி! உங்களுக்கு இறையாசி பெருகட்டும்!

"பின்பு, அவர் அவர்களை
நோக்கி; நீங்கள்
உலகதெங்கும் போய், சர்வ
சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப்
பிரங்கியுங்கள்."
மாற்கு 16:15

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்
பெற்றவன் இரட்சிக்கப்படுவான்;
விசுவாசியாதவனோ
ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கப்படுவான்."
மாற்கு 16:16

கவியரசர் கண்ணதாசன் 1982இல் எழுதிய 'இயேசு காவியம்' எனும் 400 பக்க நூலின் இறுதி அத்தியாயத்திலிருந்து இரு கவிகள்

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது
யூத நிலத்தினிலே!
சத்திய வேதம் நின்று நிலைத்தது
தாரணி மீதினிலே!
எத்தனை உண்மை வந்து பிறந்தது
இயேசு பிறந்ததிலே!
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது
இயேசுவின் வார்த்தையிலே!
மண்ணிடை இயேசு மறுபடி வருவார்
என்பது சத்தியமே!
புண்கள் இருக்கும் வரையில் மருந்து
இதுதான் தத்துவமே!
எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே;
இயேசுவை நம்புவமே!

## இலங்கை நாட்டிற்காய் வேண்டல்

விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராகிய கடவுளே,
ஒரே மனிதனிலிருந்து உலகித்திலுள்ள அத்தனை
இனத்தாரையும் மொழியினரையும்
தோன்றச் செய்தவரே,
அளவிடமுடியாத உமது ஞானத்திற்காய்
உம்மைப் போற்றிப் புகழுகின்றோம்.
இலங்கை நாட்டில் எங்களைப் பிறக்கச் செய்க
உமது நோக்கத்திற்காய் நாங்கள்
உம்மைத் துதிக்கிறோம்.

படைப்பின் தேவனே, எங்கள் நாட்டின்
தமிழ், சிங்கள மொழிகளுக்காக,
கலாச்சாரங்களுக்காக, மக்களினங்களுக்காக
உம்மைத் துதிக்கிறோம்.
நாட்டின் மண்வளம், நீர்வளம் மற்றும்
தாதுவளத்திற்காய் உமக்கு நன்றி சொல்லுகிறோம்.
எங்கள் நாட்டு சுதந்திரம் கொடுத்ததற்காய்
உம்மைப் போற்றுகிறோம்.
இதற்காய் உழைத்த, உயிர்கொடுத்த
அத்தனை பேருக்காகவும்,
ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

சேனைகளின் கர்த்தரே,
எங்களை ஆளும் தலைவர்களுக்காய்
உம்மை வேண்டுகிறோம்.
அவர்கள் ஒவ்வொருவரும் தன்னலமின்றித்
தியாகவுணர்வுடனும், பாரபட்சமின்றி
அர்ப்பணிப்புடனும், ஊழலின்றி உண்மையுடனும்
செயல்பட அவர்களை உமது கரத்திற்குள் வைத்துக்
கொள்ளும். நாட்டின் சமாதானத்தைக் குலைக்கும் தீய
சக்திகள் ஒழிந்துபோவதாக. மக்கள் யாவரும் நாட்டின்
சட்டதிட்டங்களுக்குக் கீழ்படிந்து, ஒருவரையொருவர்
மதித்து நடக்க உதவி செய்யும். செல்வந்தர்கள் தங்கள்
பணப்பைகளை ஏழை எளியவருக்குத் தாராளமாய்த்
கொடுக்கும் மனப்பான்மை இலங்கை நாட்டில்
உருவாகிப் பெருகட்டும்.

வானுலகைப் படைத்த பரனே,
எங்கள் நாட்டில் பஞ்சம் தாண்டவமாடாதபடி ஏற்ற
காலத்தில் நல்ல மழையை அனுப்பித் தாரும்.
தரித்தரர், தள்ளப்பட்டோர், திக்கற்றோர், அனாதைகள்
இன்னும் இதுபோன்று சிறுமைப்பட்டவர்களுக்குத்
தொண்டாற்றும் நபர்களையும் நிறுவனங்களையும்
சிறப்பாய் ஆசீர்வதியும். வசதி படைத்த
நாடுகளிலிருந்து இலங்கை நாட்டிற்று அனுப்பப்படும்
உதவிகள் அதிகாரிகளால் திருடப்படாதிருக்கும்படிச்
செய்யும். அடிப்படை வசதிகள் கூட இல்லாது
அவதியுறும் இலங்கை மக்களுக்கு இரங்கும் தேவா.

இலங்கை திருச்சபை இயேசுவின் நற்செய்திப்
பேராணையை இந்தத் தலைமுறையிலேயே
நிறைவேற்றி முடிக்கும்படி நாங்கள்
யாவரும் உறக்கம் தெளிய, உற்சாகம் கொள்ள
எங்களைத் தட்டியெழுப்பும். ஆமென், ஆமென்!

"உம்முடைய சத்தியத்தினாலே
அவர்களைப் பரிசுத்தமாக்கும்;
உம்முடைய வசனமே சத்தியம்."
யோவான் 17:17

"மெய்யாகவே மெய்யாகவே நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன்;
நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ
சந்தோசப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள்,
ஆனாலும் உங்கள் துக்கம் சந்தேசமாக மாறும்."
யோவான் 16:20



"இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்
போது நாம் அவர் வருகையில் அவருக்கு
முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல்
தைரியமுள்ளவர்களாயிருக்கும் படிக்கு
அவரில் நிலைத்திருங்கள்."
1யோவான் 2:28

(இப்பிரசுரத்தைத் தயவுசெய்து இன்னொரு முறை வாசியுங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் கொடுங்கள். நன்றி!)

**ஜெப உதவிக்கு** Email Address :- jesuslovesyou27@hotmail.com

(விளம்பர இலக்கம் CR 35470) 06

## காஷ்மீர் தினத்தை முன்னிட்டு முஸ்லிம்களால் ஆர்ப்பாட்டம்!

முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் காஷ்மீர் கறுப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு காரியாலயத்தின் முன்னால் முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பால் நேற்றுமுன்தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாம் ஏந்தியிருந்த பதாகைகளில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இந்தவிடயத்தில் தலையிட்டு, இந்தியா, பாகிஸ்தான் இடையிலான முரண்பாடுகளை தீர்த்துவைக்க வேண்டும். என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1948



மறைவு 27 . 10 . 2021

### திருமதி சிவசுப்பிரமணியம் புண்ணியதர்மபத்தினி

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் புண்ணியதர்மபத்தினி அவர்கள் கடந்த (27.10.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் செட்டியாரின் அன்பு மனைவியும், லெட்சுமிப்பிரபா (ஆசிரியை-யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்), சந்திரப்பிரபா, பிரபாகரன் (சுவிஸ்), திவாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவேந்திரகலாநிதி (உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்), ஞானதேசிகன் (ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்), தர்ஷி (சுவிஸ்), கஜேந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜகேசன், நிரோகேசன், சிவநிரோஜினி, மஞ்சுளானி, தஷ்மிதா, ஹீர்த்மிதா, ஹரிதஷ்மன், ஹரிஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிருதுஷா, தேஜஸ்ஸ்ரீ, பிரகதேஷ், தேஜஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி சடங்கு இன்று (29.10.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயண்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

43, மணிக்கூட்டு ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 17879) 01/06

## சிறுவர், முதியோர் இல்லங்கள் பழைய விலையில் பால் மா பெறலாம்

*மாகாண ஆணையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள் என்பனவற்றுக்கு பழைய விலையில் ஒரு கிலோ அங்கர் பால்மா பெட்டிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்துள்ளார்.

பால் மா தேவைப்படும் சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள் யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமைக்காரியாலய உதவி ஆணையாளரை அணுகுவதன் ஊடாகவோ அல்லது 021 205 7064 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்வதனூடாகவோ பால்மா பெட்டிகளை பழைய விலையில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் கூட்டுறவு ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 22 . 02 . 1945



இறப்பு 28 . 10 . 2021

### அலெஸ் பாக்கியநாதன் (பாக்கியம் அப்பா)

(ஓய்வுநிலை பணியாளர் - கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனம்)

அலெஸ் பாக்கியநாதன் (பாக்கியம் அப்பா) நேற்று (28.10.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார் என்பதை கேள்வியுற்று நாம் மிகவும் வேதனையடைகின்றோம். அமரர் அலெஸ் பாக்கியநாதன் எமது கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்திற்கும், யாழ் திரு அவைக்கும் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய சேவையை நன்றியோடு நினைப்பதோடு அவரது ஆன்மா இறைவனின் நிலையான அமைதியில் இளைப்பாற மன்றாடுகின்றோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் இவரது பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் செபங்களோடு கூடிய எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்கேற்கும்
இயக்குனர், பணியாளர்கள்
கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனம்.

(CS 17880) 1/6

## அதிர்ஷ்டமழித்த பணம் 5 பாடசாலைகளுக்கு

*முன்மாதிரியான பேருவளைவாசி*

டுபாயில் லொத்தர் சீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற பெருந்தாகைப் பணத்தை, 5 பாடசாலைகளின் அபிவிருத்திக்கு வழங்கியுள்ளார் பேருவளைவாசி.

பேருவளை மரக்கலவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த மிஷ்பான் மொஹமட் என்பவர் டுபாயில் தொழில் செய்துகொண்டிருந்தபோது, லொத்தர் சீட்டின் மூலம் பெருந்தொகைப் பணத்தை அதிர்ஷ்டமாகப் பெற்றார். தனக்குக் கிடைத்த பணத்தை நாடு திரும்பியதும் அவர், தான் கல்வி கற்ற பேருவளைப் பிரதேசத்தில் உள்ள 5 இஸ்லாமிய பாடசாலைகளின் அபிவிருத்திக்காகப் பகிர்ந்தளித்துள்ளார். அதற்கான நிதியை பேருவளை பாடசாலைகள் அபிவிருத்திக் குழு. நிர்வாகிகளிடம் கையளித்துள்ளார்.

(ஒ-4)

## மரண அறிவித்தல்

மண்ணில் 27 . 03 . 1930



விண்ணில் 23 . 10 . 2021

### திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி

பெரியவிளான் - இளவாலை

(எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி)

பெரியவிளானை பிறப்பிடமாகவும், பெரியவிளான் அத்தியடியை வசிப்பிடமாகவும், தற்சமயம் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி கடந்த (23.10.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ட புத்திரியும், அமரர்களான செல்லய்யா-சின்னபிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், அமரர் C.S.இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், மகேந்திரா, ராணி, பராசக்தி, அமரர் பாலேந்திரா, தேவா, சிறீதர் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் சபாரத்தினம், Dr.தர்மராஜசிங்கம், அமரர்களான யோகரத்தினம், மனோரஞ்சிதம், தளையசிங்கம் மற்றும் இராசரத்தினம், சிவராசரத்தினம், பராசக்தி, ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு அக்காவும், மங்களா, காலஞ்சென்றவர்களான தயாளகுமார், ஜெகநாதன் மற்றும் ஜோதி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பத்மாவதி, சிவசோதி, தவமணிதேவி, அமரர்களான குணரத்தினம் புஸ்பமலர் மற்றும் சோமாவதி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் ரவீந்திரராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரணித்தா, ஷர்மிலா, ராதிக்கா, நித்திக்கா, சிவாந்தி சிவானி, ஜனனி ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும், இன்னும் 17 பூட்டிகளையும் கண்டு மகிழ்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (31.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு லண்டனில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: சகோதரர்கள்
Dr.தர்மராஜசிங்கம்-தெல்லிப்பளை கிழக்கு,
பொ.இராசரத்தினம் - கோப்பாய் வடக்கு,
பொ.சிவராசரத்தினம் - பெரியவிளான், இளவாலை.

(CS 17877/1/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 08 . 1981



இறப்பு 26 . 10 . 2021

### பொன்னுத்துரை காண்டீபன்

கல்வயலை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை காண்டீபன் அவர்கள் (26.10.2021) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கந்தராசா - யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரலேகா அவர்களின் அன்புக் கணவரும், காணஷரன், கார்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவபாதசுந்தரம் - சந்திரா (லண்டன்), பாலசுப்ரமணியம் - செல்வராணி (லண்டன்), யோகேஸ்வரன் - அமரர் சத்தியா (லண்டன்), அமரர் யோகரத்தினம் - புஸ்பராணி (லண்டன்) ஆகியோரின் மருமகனும், அமரர் Dr. தம்பித்துரை - செல்வரத்தினம் (லண்டன்), அமரர் திசைவீரசிங்கம் - வள்ளிநாயகி (சுவீடன்), ஜெயவீரசிங்கம் - வனஜா (சுவீடன்), அமரர் தங்கரத்தினம், துரைராஜசிங்கம்-செல்வராணி (கனடா) ஆகியோரின் பெறாமகனும், மகேஸ்வரி-கணபதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், சர்மிலா (கனடா), பிரபா (கனடா), தனுசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சித்தன்மாவடி வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 677 5349

(CR 5484) 1/6

Baby Photo

**PRINTING SOLUTIONS**

91, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 6912 076 141 9308

# தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பழம்பெரும் 30 வருட அனுபவத்தைக் கொண்ட Baby Photo நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

❖ **காசாளர்**
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
- 21 தொடக்கம் 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- Ms Office &Computer Knowledge தெரிந்திருத்தல்
- தமிழ், ஆங்கிலம் உட்பட சிங்களம் ஓரளவு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிகதகைமைகளாகக் கொள்ளப்படும்.

❖ **Graphic Designer - I**
- Adobe Photoshop

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

❖ **Graphic Designer - II**
- Coral Draw
- Adobe Illustrator

மேற்குறிப்பிட்ட துறையில் அனுபவம் உள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும்விண்ணப்பிக்கலாம்.

❖ **Studio Work , Printing & Designing**

பழக விரும்புபவர்கள் ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட தகமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 15.11.2021 இற்கு முன்னதாககீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரி/தபால் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**மின்னஞ்சல் முகவரி : babyphotoprintingsolution@yahoo.com**
**தபால் முகவரி : பேபிபோட்டோ**
**இல 91,பலாலிவீதி,**
**திருநெல்வேலி.**

(CS 17876) (3.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 01 . 1939



மறைவு 28 . 10 . 2021

### சின்னையா செல்வபாக்கியம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னையா செல்வபாக்கியம் நேற்று (28.10.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னையாவின் மனைவியும் உதயகுமார் காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் சுரேந்திரகுமார், ராம்குமார், ஜானகி ஆகியோரின் தாயாரும், நீலரஞ்சினி, வசந்தி, நிர்மலநாதன் ஆகியோரின் மாமியாரும், தாட்ஷாயினி, வைஸ்ணவதேவி, ரஜி, கோபி, கிரி, செழியன், கீர்த்தனா, ஆர்த்தி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2021) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**ராம்குமார் - 077 947 7733**
**நீலரஞ்சினி - 077 410 4752**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 40807)(3.6)

## இரண்டாவது வருட நினைவு அஞ்சலி

அகிலத்தில் 06 . 10 . 1950



ஆண்டவன் மடியில் 29 . 10 . 2019

### அமரர் துரைராசசிங்கம் தில்லையம்பலம்

காற்றால் கரைந்து போன காலங்கள்
கவலையில் நொந்து போன மனங்கள்
ஓடிப் போய் விட்ட இரண்டு ஆண்டுகள்
ஓயாமல் தவிக்கும் உணர்வுகள்
துணையின்றி துடிக்கும் உறவுகள்
தூக்கத்திலும் மறவாத நினைவுகள்
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

பாசமிகு மனைவி,
பிள்ளைகள் : சுவாதி, பாரதி.

(cs 40798) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 1941 . 10 . 31



இறப்பு 2021 . 10 . 28

### திருமதி இராஜேஸ்வரி சோமசேகரன்
**(பதிவு பெற்ற வைத்திய அதிகாரி)**

பேரம்பலம் அவெனியூ சங்குவேலி மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி சோமசேகரன் அவர்கள் 28.10.2021 வியாழக்கிழமையன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான பேரம்பலம் (ஆசிரியர்), நாகரத்தினம் தம்பதியினரின் புதல்வியும் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தலைமை ஆசிரியர் வைர முத்து (செல்லையா வாத்தியார்), மனோன்மணி அம்மா தம்பதியினரின் மூத்த மரு மகளும் காலஞ்சென்றவரான வைரமுத்து சோமசேகரன் (ஓய்வு நிலை பிரதம எழுது வினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும், வைதேகி (நோர்வே), மைக்ரோ பீசி சிஸ்டம் இயக்குனர்களான ககனாந்தா, குகனானந்தா ஆகியோரின் தாயாரும் பிரபா கரன் (நோர்வே), வினோதா, கார்த்திகா ஆகியோரின் மாமியாரும் கருணிகா (நோர்வே), தனிஷ்கா, யாதுரா, பிரதன் ஆகியோரின் பேத்தியாரும் பரமேஸ்வரி, காலஞ் சென்றவர்களான யுகவதி, மகேஸ்வரி மற்றும் பரஞ்சோதிநாதன், மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகரட்ணம் மற்றும் பொன்மயிலாம் பிகை, காலஞ்சென்ற பூரணானந்தம்பிள்ளை மற்றும் திருநிலைநாயகி (கனடா), செல்வேந்திரன் (கனடா), விஜயேந்திரன் (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற பாலேந் திரன் மற்றும் கலாமணி, காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணம், பாலேந்திரன் மற்றும் அமிர்தலிங்கம், உமாதேவி, விஜயசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் பஜனேஸ்வரி (பிரான்ஸ்), மகாலிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் காந்தமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மதிவதனி (லண்டன்), பிரியதர்ஷினி (பிரான்ஸ்), லோகநாதன் (KMT) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதன் பின் 31.10.2021 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் பொரளை ஜெய ரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
இல.115/8, டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, வெள்ளவத்தை

CS 17878/11

# கேள்வி அறிவித்தல் -2022
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்குபிரதேசசபையின் அதிகாரஎல்லைக்குட்பட்ட,கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச் சந்தைகள்,துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம்,பொதுமலசலகூடம் மற்றும் இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடை என்பவற்றை 2022.01.01 ஆம் திகதிதொடக்கம் 2022.12.31 ஆம் திகதிவரை யானகாலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : 12.11.2021 மதியம் 12.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | : 12.11.2021 பி.ப 2.30 மணிவரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : 12.11.2021 பி.ப 2.30 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம் |

01. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் **"தவிசாளர் வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை மானிப்பாய்"** என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்குமுன் போடப்படுதல் வேண்டும்

02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசியஅடையாளஅட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராமஅலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சிமன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்டஎவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படு வதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

06. கேள்விநிபந்தனைகள், அறிவுறுத்தலுக்குஅமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்த வொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோஅல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

08. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு எடுப்பவர்கள் நடாத்துவதற்குரிய இடத் தினைத் தாங்களே தெரிவுசெய்தல் வேண்டும்.

09. மாதவாடகையானது விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.

10. அரசாங்கத்தினால் காலத்திற்குகாலம் விதிக்கப்படும் வரியினை செலுத்துதல் வேண்டும்.

11. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3பகுதியை 26.11.2021ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும்.

12. கேள்விப்பத்திரங்களை தலைமைஅலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

13. நாட்டில் ஏற்படக் கூடிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப் படலாம்.

| இல | பொதுச் சந்தைகள்,(துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம்,பொதுமலசலகூடம்). இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | மானிப்பாய் பொதுச் சந்தை(மீன் சந்தை,மரக்கறிச் சந்தை,துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 18,500.00 | 2,468,820.00 | |
| 02 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை (புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 2,500.00 | 339,500.00 | 600.00 |
| 03 | மானிப்பாய் பொதுச் சந்தை கருவாட்டுக்கடை அல்லதுமாமிசம் பதனிடும் கடை(புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 5,000.00 | 9,610.00 | 600.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | | 782,100.00 | 600.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | காக்கைதீவுப் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 8,000.00 | 726,550.00 | |
| 02 | காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம் (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்குமாத்திரம்) | 500.00 | 1.500.00 | 23,0 00.00 | |
| 03 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 2,000.00 | 232,230.00 | |
| 04 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 21,000.00 | 300.00 |
| 05 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 385,125.00 | 400.00 |
| 06 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 3,500.00 | 304,050.00 | |
| 07 | ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 300,090.00 | |
| பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை | 1,000.00 | 18,000.00 | 2,421,765.00 | |
| 02 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 517,000.00 | 2,250.00 |
| 03 | பண்டத்தரிப்புச் சாந்தைச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 510,520.00 | |
| | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 710,010.00 | 2,250.00 |
| பண்டத்தரிப்புகிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 211,775.00 | |
| 02 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 81,070.00 | 800.00 |
| 03 | இளவாலைப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 161,480.00 | |
| 04 | இளவாலைப் பொதுச் சந்தைகோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,500.00 | 96,800.00 | |
| 05 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 277,200.00 | |
| 06 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 26,190.00 | 750.00 |
| 07 | மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 214,500.00 | 750.00 |
| 08 | இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 467,580.00 | |
| 09 | மாகியப்பிட்டி பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 331,225.00 | 800.00 |

**அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்.** (cr 35486) (2.6) 2021.10.28



# அரசுக்கு எதிராக வேலைநிறுத்தம்
## தயாராகும் தொழிற்சங்கங்கள்

கொழும்பு,ஒக்.29
கெரவலப்பிட்டிய யுகதனவி அனல் மின்நிலையத்தில் 40 வீத பங்குகளை, அமெரிக்க நிறுவனத்துக்கு. வழங்கும் அரசின் தீர்மானத் துக்கு எதி ராக, 48 மணிநேர வேலை நிறுத்தப் போராட் டத்தை முன் னெடுப்பது தொடர்பில் எரிசக் தித் துறையின் தொழிற்சங் கங்கள் கவனம் செலுத்தி யுள் ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவைகள் சங்கத்தின் பிர தம செயலாளரான ரஞ்சன் ஜெயலால் இதனைத் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரை யாடல் அரசுடன் இணைந்த 11 கட்சிகளின் தலைவர்க ளுக்கும், பெற்றோலியம், மின்சாரம் மற் றும் துறைமுக தொழிற்சங்கங் களின் பிரதிநிதிக ளுக்கும் இடை யில் இடம்பெற் றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ-4)


## மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281 (m 17805) (2.6)

## வாடகைக்கு
இரத்தினபுரம் 1ஆம் ஒழுங்கையில் 300 கோழிகள் வளர்க்கக்கூடிய நிலக் கூட்டுடன் வீடு வாடகைக்கு உண்டு.
(CS 1100)(3.6)
தொடர்பு : 077 915 2223

## பெயர் மாற்றம்
Hindu's School Lane, வல்வெட்டி, வல்வெட்டித்துறையை வசிப்பிட மாகக்கொண்ட **மனோகரன் சுஜீபன்** ஆகிய நான் எனது பெயரை **மனோகரன் சுஜீவன்** என அனைத்து ஆவணங்களிலும் இன்றில் இருந்து பெயர் மாற்றுகின்றேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.
(cr.35474) (2.6) **மனோகரன் சுஜீவன்**




தீபத் திருநாளை முன்னிட்டு
யாழ் நகரில் எங்கும் இல்லாத
மாபெரும் ஆடை
விலைத் தள்ளுபடி
சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்து விதமான சாறி, சல்வார், டொப்ஆண்களுக்கான அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் முந்துங்கள்
லலிதா ரெக்ஸ் Lalitha Tex
5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம். New Market Jaffna. 021 222 5260
ஸ்ரீ லலிதா பெஷன் Sri Lalitha Fashion
இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 4003


## கண்ணீர் அஞ்சலி

எனது பாடசாலை தோழனும் நீண்ட கால ஆயிருர் நண்பனும் ஆகிய

**அப்பையா சீவரட்ணம்**



அவர்கள் கடந்த (25.10.2021) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆழ்ந்த கவலையுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(CS 40802)(3.6)

நண்பன்
சதாசிவம் பாலசுப்பிரமணியமும் அவரது குடும்பமும்
14, சௌமிய பவனம், பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை

# கேள்வி அறிவித்தல் - 2022

## கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2022.01.01- 2022.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|
| திகதி:- 2021.10.29 ஆம் திகதி முதல் 2021.11.11 ஆம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும். | திகதி:- 2021.11.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை | திகதி:- 2021.11.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை |
| நேரம்:- மு.ப 09.00 - பி.ப 2.00 வரை | நேரம்:- மு.ப 10.00 மணி | நேரம்:- மு.ப 10.00 மணி |
| இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2021.11.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2021.11.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன் | 50,000.00 | 1,000.00 | 2,860,000.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 120,000.00 | 1,000.00 | 6,008,200.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 25,000.00 | 1,000.00 | 1,408,000.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை தேங்காய் | 25,000.00 | 1,000.00 | 1,804,000.00 |
| 5 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 305,414.55 |
| 6 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் .பாதுகாப்பு நிலையம் | 60,000.00 | 1,000.00 | 3,932,775.00 |
| 7 | கிளிநொச்சி இல.1 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 3,493,050.00 |
| 8 | கிளிநொச்சி இல.2 கோழி இறைச்சிக்கடை | 40,000.00 | 1,000.00 | 3,333,000.00 |
| 9 | கிளிநொச்சி மாட்டிறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 3,038,200.00 |
| 10 | கிளிநொச்சி ஆட்டிறைச்சிக்கடை | 4,000.00 | 1,000.00 | 239,910.00 |
| 11 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 3,000.00 | 1,000.00 | 79,536.49 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா அருகில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 712,800.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 6,000.00 | 1,000.00 | 174,217.00 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 36,000.00 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை | 1,000.00 | 1,000.00 | 83,600.00 |
| 2 | பரந்தன் மாட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 1,000.00 | 812,900.00 |
| 3 | பரந்தன் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 298,100.00 |
| 4 | பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 77,000.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 7,000.00 | 1,000.00 | 190,967.30 |
| 2 | வட்டக்கச்சி மாட்டிறைச்சிக்கடை | 8,000.00 | 1,000.00 | 441,650.00 |
| 3 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 385,000.00 |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 394,460.00 |
| 5 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 284,719.00 |
| 6 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 45,100.00 |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 38,500.00 |
| | இரணைமடு மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,325,500.00 |
| 2 | இரணைமடு கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 716,100.00 |
| | கனகாம்பிகைக்குளம் | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 6,000.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 15,903.78 |
| 2 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 330,220.00 |
| 3 | D10உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 83,600.00 |
| 4 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 165,000.00 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 10,000.00 | 1,000.00 | 413,875.00 |
| 2 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 511,500.00 |
| 3 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 171,600.00 |
| | பொதுச்சந்தை- தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 2,000.00 | 1,000.00 | 56,438.05 |
| 2 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 525,250.00 |
| 3 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 156,200.00 |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 79,200.00 |
| | பொதுச்சந்தை- ஜெயந்திநகர் | | | |
| 1 | ஜெயந்திநகர் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 486,200.00 |
| 2 | ஜெயந்திநகர் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 242,000.00 |
| | பொதுச்சந்தை- ஊற்றுப்புலம் | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 193,050.00 |
| | பொதுச்சந்தை- ஆனைவிழுந்தான் | | | |
| 1 | ஆனைவிழுந்தான் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 81,907.00 |
| | வன்னேரிக்குளம் | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 48,000.00 |
| | பொதுச்சந்தை- கண்டாவளை | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 31,842.15 |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 134,420.00 |
| 2 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 50,020.74 |
| | பொதுச்சந்தை- அக்கராயன் | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 100,210.00 |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 222,200.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 244,200.00 |

### நிபந்தனைகள்

01. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
02. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்ததவறியவர்களும், கறுப்பு பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
03. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்வி சபைக்கு அதிகாரமுண்டு.
04. கேள்விகாரர் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசித்தல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி விண்ணபத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
07. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்பு தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.
08. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நாடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அதேமாதம் 30ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப் பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப் பணத்துடன் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்ததவறும் பட்சத்தில் எதுவித முன்னறி வித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேசசபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
12. துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா.5.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.10.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 20.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிடமுடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்கு படுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப் படுவதுடன், கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
16. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருப்பதை அறிமுகச் சான்றிதழ் மற்றும் வதிவிடசான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் உறுதிப்படுத்தவேண்டும்.
17. கேள்விகோரும்போது கட்டுப்பணத்தை குறித்தகால எல்லைக்குள் (அதிகபட்சம் ஒருவாரகாலம்) செலுத்துவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
18. சபையால் கட்டப்பட்டகடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டிவழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
19. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
20. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
21. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளி யிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
22. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக் கெதிராகவோ தவிசாளர் / செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற் கொள்ளமுடியாது.

**தவிசாளர்,**

**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(CR 35485) (3.6)

# 33ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் கணபதிப்பிள்ளை இந்திரராசா

(ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/ சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி)

அமரர் அவர்கள் பிரதி அதிபராக கடமையாற்றிய காலம் ஒரு பொற்காலமாகும். கல்லூரியின் வளர்ச்சிக்கு தனது நிர்வாகத்துறை மற்றும் அனுபவம் யாவற்றையும் பயன்படுத்திய ஒரு பெருந்தகை ஆவார். பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்தால் கல்லூரிக்கு பல நன்மைகளை செய்யலாமென்ற மனப்பாங்குடன் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து செயலாற்றினார். கொழும்பு பழைய மாணவர் சங்கக்கிளையின் உருவாக்கத்திற்கு பக்கபலமாக நின்று உழைத்த வராவர்.

அன்னாரின் இழப்பு கல்லூரிக்கும், கல்விசார் சமூகத்தினருக்கும் ஆன்மிகவழி நிற்போருக்கும் ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப் போமாக.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

(cs 17763) (2.6)

**பழைய மாணவர் சங்கம்**

**யா/ சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி - சுழிபுரம்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு **04.07.1933**

இறப்பு **29.09.2021**

## அரியம் நல்லம்மா

உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியம் நல்லம்மா கடந்த (29.09.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் அமரர்களான ஐயம்பிள்ளை மீனாட்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற அரியம் அவர்களின் அன்பு மனைவியும், நடராஜா (அமரர்), தவயோகராஜா, புஸ்பமலர் (அமரர்), தேவமலர் (அமரர்) ஆகியோரின் சகோதரியும், வசந்தராசா (நெதர்லாந்து), சாரதாதேவி (பிரான்ஸ்), சந்திராதேவி, சறோஜாதேவி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற ஜெயம், பரமேஸ் வரி அவர்களும், பரமநாதன், சுபாஸ்சந்திரபோஸ் ஆகியோரின் மாமியும், நிக்ஷன், அனுஷா (லண்டன்), அஜித் லாலி (கனடா), சிறிகுமார் லக்ஸி (பிரான்ஸ்), குணசேகரம் விவித்தா (சுவிஸ்), மனோஸ்குமார் றஜித்தா (வைத்தியசாலை ஊழியர் தெல்லிப்பளை), ஸ்ரீகுமார் விஜித்தா (சுவிஸ்), விஜிந்தன் (ஆசிரியர்-யா/மானிப்பாய் சென்ற் ஆன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), கேசினி (ஆசிரியர்-யா/புதுமடம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), ரூபதன் (அதிபர்- மல்வத்தை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) ஜெனித்தா, அஜந்தன் ஜஜிதா (சுவிஸ்), தர்சுதன் (பொறியியலாளர் - கொழும்பு), கசோலினா (ஆசிரியர்-கொழும்பு) ஆகியோரின் பேர்த்தி யும், மற்றியா, சமியா (லண்டன்), ஸ்ரயா கைலா, சோபியா (கனடா), சைனி, கிஷான், அடினா (பிரான்ஸ்), துர்சிக்கா, சுஜிக்கா, கிருசிக்கா (சுவிஸ்), அபிஷேக் , சுருத்திக்கா, கருஸ்வினி (இலங்கை), விக்காஸ், சரணியா, ரித்தீஸ், ஆதீஸ் (சுவிஸ்), சுவர்ணன், ரிஷிகேஸ், அவந்திக்கா, தருசிகன், கரிஸ்னு , அதிதி, அம்சகி, சாருசுகானா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.10.2021) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியவில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**077 137 9938, 077 676 2779**

(cs.40804) (2.6)

# 33ஆம் நாள் நினைவலைகள்



உள்ளத்தால் உயர்ந்த உத்தமர்

## கணபதிப்பிள்ளை இந்திரராஜா

வாழ்நாள் திருப்பணியாளன் சுழிபுரம் பறாளாய், கம்பனை ஆலயங்கள், வலிமேற்குப் பிரதேசம், சுழிபுரத்தைச் சேர்ந்த அமரர் கணபதிப்பிள்ளை இந்திரராஜா அவர்கள் வாழ்நாள் முழுவதும் கல்விச் சேவைக்கும் தெய்வீகப் பணிக்கும் உன்னத சேவையாற்றி சமூக முன்னோடியாகத் திகழ்ந்த உத்தமர். சிறுவயதிலிருந்தே தனது முன்னோர்களுடன் இணைந்து ஊர்க்கோயில்களில் சரியை வழி-பாட்டில் செயற்பட்ட இவர் தனது இளவயதிலிருந்து மேலதிக பணியாக ஆலயக் கட்டுமானப் பணிகளிலும் வள்ளலாகத் திகழ்ந்திருந்தார்.

அன்னாரது ஆன்மிகச் செயற்பாடுகளில் சுழிபுரம், கம்பனை சிறீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், பறாளாய் முருகன் ஆலயம் என்பன மிகவும் குறிப்பிடத்தக்கவை. இக் கோயில்களில் நாளாந்த திருப்பணிகளிலும் சரி சிறப்புப் பணிகளான கும்பாபிஷேகம் சார் அனைத்துப் பணிகளிலும் ஊர்க் கோயில் நிர்வாகத்தில் ஒருவராகி அளப்பரிய பணிகளாற்றி தெய்வ அருள் பெற்ற ஓர் ஆசானும் ஆனார்.

அன்னாரது வீட்டிலிருந்து பிற இடங்களுக்குச் செல்லும் வழியிலே "கம்பனை அம்மன்" கோயில் அமைந்துள்ளதால் நாளாந்த வழிபாடும், விசேட திருப்பணிகளும் திருவிழா உபயங்களும் என அளப்பரிய தொண்டுகளாற்றியுள்ளார் என்பதனை விசேடமாகக் குறிப்பிட வேண்டியவர்களாகிறோம்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்"

எனும் பொய்யா மொழிக்கிணங்க சமூகத்தவருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து ஊரைச் சிறப்பி-த்த உத்தமர், எல்லோர் உள்ளங்களில் உயர்ந்து நிற்கிறார் என்பதில் எமக்கு ஐயம் இல்லை என்பது உறுதியே. அன்னாரது வாழ்வு பிறவிப் பெருங்கடலை தாண்டியமை கொண்டு பிறவாமை மேலோங்க அம்பாள் அருள்வேண்டிப் பிரார்த்திக்கும் நிர்வாகத்தினர்.

**சிறீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்.**
**கம்பனை, சுழிபுரம்,**

(CS 17873) (3.6)

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை**
**காங்கேசன்துறை உப அலுவலகம்**

## ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

**விண்ணப்பதாரர்- கஜேந்திரன் பெண் விஜிதா**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை உப அலுவலகத்திற்குட்பட்ட கலைவாணி வீதி, தையிட்டி எனும் முகவரியில் அமைந்துள்ளதும் 9251 ம் இலக்க 30.06.2003ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு திரு. ஐ. கேதீஸ்வரன் முகதாவில் நிறை வேறிய நன்கொடை உறுதி மூலம் வந்தடைந்ததுமான மயிலிட்டிக் கோயிற்பற்று தையிட்டி இறை "ஆலடியிற்கலட்டி" நிலப்பரப்பு 03 இது 29.01.2017ல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் M. சண்முகநாதன் அவர்களால் 3011ம் இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் Lot 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை கஜேந்திரன் பெண் விஜிதா ஆகியோர் தங்களது பெயரில் ஆதன உரிமையை உறுதிப் படுத்த விண்ணப்பித்துள்ளனர்.

குறித்த ஆதனமானது முருகுப்பிள்ளை நடராசா ஆகியவரின் பெயரிலிருந்தது ஆயினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அவ்வுறுதி அழிவடைந்தமை யினால் முருகுப்பிள்ளை நடராசா ஆகியவர் தனது பெயரில் 2071ம் இலக்க 24.10.2021ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியை எழுதியுள்ளனர். பின்னர் 9251ம் இலக்க 30.06.2003 திகதிய நன்கொடை உறுதி மூலம் கஜேந்திரன் பெண் விஜிதா ஆகியோருக்கு நன்கொடை வழங்கியுள்ளனர்.

**ஆதன விபரம்**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோயிற் பற்று தையிட்டி இறை "ஆலடியிற்கலட்டி" உறுதிப்படி நிலப்பரப்பு ஆறு (06) இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு மூன்று (நில.பர.03 ) இதில் நிலப்பரப்பு 1/4 பிறநீங்கலாக இது 29.01.2017ல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் M. சண்முகநாதன் அவர் களால் 3011ம் இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் Lot 01 எனக் காட்டப் பட்டுள்ளது.. இதன் எல்லைகள்,

கிழக்கு : பாதையும் செல்லப்பா பெண் லெச்சுமி மறுபேருக்குமுரிய ஆதனம்
வடக்கு : ஆ.வேலாயுதம் நடராசா பெண் பெருமாளின் ஆதனம்
மேற்கு : ரஜ்சித் தேவிக்குரிய ஆதனம்
தெற்கு : சி.செல்வராசாவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை கஜேந்திரன் பெண் விஜிதா ஆகியோர் தங்களது பெயரிற்கு ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே கஜேந்திரன் பெண் விஜிதா என்பவரது பெயரில் ஆதன உரிமையை உறுதிப் படுத்துவது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக் காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு கட்டட அனுமதி வழங்க நடவ டிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாகாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிவடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை.**

(CS 40806)(3.6)

## நாட்டை....

நாட்டின் இறையாண்மையைச் சல்லி காசுக்கு விற்பனை செய்ய இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசு கடந்த காலத்தில் தேசாபிமானம், தேசப்பற்று, இறையாண்மை பற்றி பேசிய அனைத்துக் கதைகளும் இன்று வெற்றுப்பேச்சுக்களாகியுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

"அரசின் தூரநோக்கற்ற வேலைகளால், பல்தேசிய நிறுவனங்கள் நாட்டின் இறையாண்மையைத் தமது கையில் எடுத்துச் செயற்பட்டு வருகின்றன. நிறுவனங்களுக்குத் தன்னிச்சையாகச் செயற்பட இடமளித்து விட்டு அரசு செய்வதறியாது வேடிக்கை பார்க்கின்றது. இதற்காகவா 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசைத் தெரிவு செய்தனர்?.

அரசின் சில அமைச்சர்கள் தூதரகங்களுக்குச் சென்று அடிபணியும் நிலைமையில் நாடு சர்வதேசத்துக்கு முன்னால் கேவலப்படுத்தப்பட்டுள்ளது. இராஜதந்திரத்தை மறந்துள்ள அரசின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் இறையாண்மையுடன் விளையாடி வருகின்றனர். நாட்டின் இறையாண்மையுடன் இவ்வாறு விளையாட எவருக்கும் இடமளிக்க முடியாது. அரசின் இந்தத் தான்தோன்றித்தனமான வேலைத்திட்டத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி குரல் கொடுக்கும். அரசை வீட்டுக்கு அனுப்புவதே எமது இலக்கு" என்றார். (த-22)

## யாழ்....

யப்பட்டு இருந்தது போன்ற பல கேள்விகள் தன்னிடம் விசாரணையின் போது கேட்கப்பட்டன என்று, யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன் தெரிவித்தார்.

யாழ். மாநகரில் தண்டப்பணம் அறவிடும் நடைமுறையை கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர உத்தியோகத்தர்கள் ஐந்து பேருக்கும் சீருடையை வடிவமைத்துப் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக யாழ். மாநகர சபை உறுப்பினர் பார்த்திபன் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார். அவரை சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை ரி.ஐ.டி.யினர் விசாரித்தனர்.

அதன்பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே பார்த்திபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாநகர திண்மக்கழிவகற்றல் தொடர்பாக தண்டப்பணம் அறவிடும் அதிகாரங்கள் மாநகரசபைக்கு உள்ளதா? இது போக்குவரத்து பொலிஸாருக்கு உரியது தானே? என்ற அடிப்படையிலும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

நல்லூருக்கு அண்மையாக உள்ள வீதியில் கழிவொயில் ஊற்றப்பட்ட தகவலை யார் உங்களுக்கு வழங்கியது? ஊற்றப்பட்ட கழிவொயில் தொடர்பாக மாநகரசபை பணியாளர்களை அங்கு அனுப்ப உத்தரவிட்டது யார்?

போக்குவரத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநகர சபைக்கு இல்லை . அதனைச் செய்வதற்கு யார் அனுமதித்தார்கள்? என்பன போன்ற பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. யாழ். மாநகரசபை அமர்விலேயே உத்தியோகபூர்வமாக ஒரு முடிவை எடுத்து ,தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு சீருடையை வழங்குவது என்றும் கொழும்பு மாநகரசபையை ஒத்த சீருடையை எமது மாநகரசபை பணியாளர்களுக்கும் வழங்குவது என்றும் தீர்மானித்தோம். இது ஒருவர் எடுத்த முடிவு அல்ல ஒட்டு மொத்தமாக கொழும்பு மாநகர சபை எடுத்த முடிவைத் தழுவி இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கழிவொயில் ஊற்றப்பட்டுள்ளது தொடர்பாகவும் அதில் பொதுமக்கள் வழுக்கி விழுகின்றமை தொடர்பிலும் நல்லூர்ப் பகுதியில் உள்ள கடை உரிமையாளர் ஒருவர் எனக்குத் தெரிவித்த நிலையிலே நாம் ஒரு தற்காலிக ஏற்பாடாக அதனைச் சீர் செய்ய எமது மாநகரப் பணியாளர்களை ஈடுபடுத்தினோம்.

மனிதாபிமான அடிப்படையிலேயே நாங்கள் இந்தப் பணியைச் செய்தோம். அதேவேளை ஏனைய தரப்புகளின் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த வேலையை நாம் செய்யவில்லை.

நல்லூர் வீதியில் ஊற்றப்பட்ட கழிவொயில் தொடர்பான விசாரணைகளில், கழிவொயில் ஊற்றப்பட்ட விடயத்தை எனக்கு தெரிவித்த கடை உரிமையாளரும் விசாரணைகளுக்காக தற்போது அழைக்கப்பட்டுள்ளார் என்று அறிந்தேன். மேலதிக விசாரணைகளுக்காக தேவைப்பட்டால் கொழும்புக்கு வர வேண்டிய நிலைமை ஏற்படுமென்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். "சீருடை விவகாரம் தொடர்பான விசாரணைகள் முடிந்துவிட்டன. ஆனால் உங்களுடைய முகப்புத்தகத்தில் போடப்பட்ட பதிவுகள் தொடர்பாக சிலவேளை உங்கள் மீது விசாரணை நடக்கலாம்'' என்று ரி.ஐ.டியினர் தெரிவித்த நிலையில் விசாரணைகள் நிறைவுக்கு வந்தன- என்றார். இதே சீருடை விடயத்தில், யாழ்.மாநகர முதல்வர் வி. மணிவண்ணனும் முன்னர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-26)

## செயலணியைக்...

என்று, தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த செயலணியின் தலைவராக ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். ஞானசாரதேரர் ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு காரணமாக தண்டிக்கப்பட்டு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு வெளியில் வந்தவர். எத்தனையோ சர்ச்சைகளில் சிக்கியவர். அப்படிப்பட்ட ஒருவர் ஒரு நாடு ஒரு சட்டம் என்கிற செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அதிலே பெயருக்குக்கூட ஒரு தமிழர் இல்லை. அப்படி என்றால் இந்த நாடு தமிழர்களுக்கு சொந்தம் இல்லையா? இந்த நாட்டிலே தமிழர்கள் வாழ்வதற்கான உரிமை இல்லையா? அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லை என்று சொல்கிறீர்களா? என்று ஜனாதிபதியை நாங்கள் கேட்கின்றோம்.

இந்த செயலணி மூலமாக, நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லை என்று அறிவிக்க என்ன தடை இருக்கிறது?. தனிநாட்டை உருவாக்கி செல்லுங்கள் என்றால் அதற்கும் நாங்கள் ஆயத்தமாகவே இருக்கின்றோம்.

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறும் முறையை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெற வேண்டும். இந்த குழுவைக் கலைக்க வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்க முன்னரே இவ்வாறான அவசரமான வேலைகளை ஏன் செய்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது- என்றார். (த-26)

## அரசு...

எஸ். இ. ரதன தேரர் குறிப்பிட்டுள்ளார். ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி ஒன்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் நியமித்திருந்தார்.

அது தொடர்பிலேயே ரதன தேரர், மேற்கண்டவாறு கடும் விமர்சனத்தை தனது பேஸ்புக்கில் வெளிப்படுத்தியுள்ளார்.

'இந்த அரசாங்கம் தங்களைப் பற்றி மட்டுமே நினைக்கின்றது. இதைப் போன்ற செயற்பாடுகள் எமது நாட்டில் இடம்பெற்றமை பெரும் அவமானமாகும்.

பல இனங்கள் வாழும் நாட்டுக்கு ஒரு குழு சட்டங்களை இயற்றுவது கேலிக்கூத்தாகும். சில முடிவுகளை எடுக்க முன்னர் ஒரு முறை அல்ல நூறு முறை பரிசீலிக்க வேண்டும்' - என் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## பங்காளிக்....

பய ராஜபக்சவுக்கும், அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் நேற்றிரவு கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கெரவலப்பிட்டிய 'யுகதனவி' மின் உற்பத்தின் நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு பங்காளிக் கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் நிதிஅமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோருடனும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் சந்திப்புகளை நடத்தியிருந்தனர்.

எனினும், உரியதீர்வு கிடைக்கவில்லை. இதனால் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்கு பங்காளிக்கட்சி தலைவர்கள் சந்தர்ப்பம் கோரினர். கடிதமும் அனுப்பிவைத்தனர். இது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டம் அல்லது ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கதைக்குமாறு ஜனாதிபதி அறிவித்து, பேச்சுக்கு சந்தர்ப்பம் வழங்க மறுத்துவிட்டார்.

இதனால் கடுப்பாகிய பங்காளிக்கட்சி தலைவர்கள், தொழிற்சங்க பிரமுகர்களுடன் சந்திப்புகளை நடத்தியதுடன், இந்தப்பிரச்சினையை மக்கள் மயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தனர். 'மக்கள் சபை' எனும் தலைப்பின்கீழ் இன்று (29) தொடக்கம் கூட்டங்களையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நேற்று மாலை பங்காளிக்கட்சி தலைவர்களுக்கு ஜனாதிபதி அவசர அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, "யுகதனவி, உரப்பிரச்சினை, கொரோனா உட்பட 12 விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் ஆரம்பக் கட்ட உடன்படிக்கை மட்டுமே கைச்சாத்திடப்பட்டுள்ளது எனவும், அடுத்துள்ள 2 உடன்படிக்கைகளே முக்கியமானவை எனவும் நிதி அமைச்சர் எங்களுக்கு தெளிவுபடுத்தினார். அந்த உடன்படிக்கைகளுக்கு எமது யோசனைகளையும் வழங்குமாறு கோரினார். இது தொடர்பில் நாம் கலந்துரையாடி முடிவை அறிவிப்போம். சந்திப்பு சாதகமாக அமைந்தது.

இதேவேளை, நாம் ஏற்பாடு செய்துள்ள கூட்டம் நடைபெறும். அதில் மாற்றம் இல்லை" - என்றார். (த-44)

## கூ. சங்க...

தொகுதி சீனி எடுத்துவரப்பட்டு விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2 லட்சத்து 80 ஆயிரம் கிலோகிராம் சீனி, வடக்குக்கு வரவுள்ளநிலையில், அதில் ஒரு தொகுதி எடுத்துவரப்பட்டு வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

ஒரு கிலோ சீனியின் நிர்ணயவிலையான 122 ரூபா படி சீனியைப் பெற்றுக்கொள்ளமுடியும். எனினும், மொத்த விற்பனைக்கு சீனி விநியோகிக்கப்பட மாட்டாது.

வடக்கில் கர்ப்பிணிகளுக்கு குறைந்த விலையில் (முன்னைய விலையில்) பால்மா பைக்கற் வழங்கப்படுவது போன்று பொதுமக்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவில் சீனி வழங்கப்படுகின்றது.

பொதுமக்கள் தமது பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பால்மா மற்றும் சீனி விற்பனை நடவடிக்கைகளை அந்தந்தப் பிரிவு கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கண்காணிப்பர் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த)

## தொற்று...

தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 9 ஆண்களும், 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 30 வயதுக்குட்பட்டவர்களில் பெண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 3 ஆண்களும், 3 பெண்களுமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்களும் 9 பெண்களுமாக 15 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 696 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை-இலங்கையில் நேற்று 540 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 38 ஆயிரத்து 860 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 ஆயிரத்து 487 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 863 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

# இலங்கை நிலத்துக்கேற்ப உரம்



## சீனாவிடமிருந்துதான் வருகிறது

கொழும்பு,ஒக்.29

**எமது நிலத்தில் விவசாயத்தை மேற்கொள்வதற்கு உகந்த உரத்தை புதிதாக உற்பத்தி செய்து தருமாறும், அவற்றை ஆய்வு செய்வதற்கு மூன்றாம் தரப்பினரை நாடுவதற்கும், சீனாவுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பெரும்போக விவசாயம் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதியுடன் ஆரம்பமானது. எட்டு லட்சம் ஹெக்ரேயர் நெற்பயிர்ச் செய்கை நிலம் காணப்படுகின்றது. ஆறரை லட்சம் விவசாயிகள் உள்ளனர். தற்போது 2 லட்சத்து 4 ஆயிரம் ஹெக்ரேயர் விவசாய நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது.

அடுத்த மாதம் எட்டு லட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும் விவசாயம் மேற்கொள்ளப்படும்.

விவசாயம் உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளுக்காக சேதனப் பசளை உரம், உயிரியல் திரவ உரம், நைட்ரஜன் உரம் மற்றும் பொட்டாசியம் உரம் ஆகிய நான்கு வகையான உர வகைகளுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இதில் இரண்டு உரங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. இரண்டு உரங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவுள்ளோம்.

உயிரியல் திரவ உரத்தையும் வழங்கி வருகிறோம். நைட்ரஜன் உரத்தை வழங்கவுள்ளோம். இந்த நைட்ரிஜன் உரம் தாங்கிய கொள்கலன்கள் அடுத்தமாதம் 5 ஆம் திகதியளவில் இந்தியாவிலிருந்து வந்தவுடன் அந்த உரத்தையும் தேவைக்கேற்ப விவசாய மத்திய நிலையங்களின் ஊடாக விநியோகிப்போம்.

இறுதியாகப் பயன்படுத்தப்படும் பொட்டாசியம் உரத்தை அடுத்தமாதம் ஆரம்பத்தில் வழங்க எதிர்பார்த்துள்ளோம். மேலும், பெரும்போக விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயப் பகுதிகளுக்கான அணைகளின் ஊடாக நீரை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

உணவுப் பாதுகாப்புக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. நெற் பயிர்ச் செய்கைக்கும் எந் ...பிரச்சினையும் ...ற்படாது என்று ...ம் நம்புகின் ...றோம்.

...ர இறக்குமதிக் ...க சீன உர நிறு ...னமொன்றுக்கு ...லை மனுக் ...காரலொன்றை ...ழங்கியிருந் ...தோம். ஆயினும்,

இந்தச் சீன நிறுவனத்தின் இறக்குமதி செய்யப்பட்ட உரத்தில் பக்ரீரியா இருந்ததால், அதனை இலங்கைக்குக் கொண்டு வர முடியாமற் போனது. அந்த நிறுவனத்துக்கு பணத்தை வழங்குவதை நிறுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவொன்றைப் பெற்றுக்கொண்டோம். அப்படி இல்லையென்றால், அந்த விலை மனுக்கோரலில் உள்ளபடி அந்த நிறுவனத்துக்கு பணம் அளிக்கப்பட வேண்டி வரும்.

ஆகவே, இராஜாங்க அமைச்சர், சீனத் தூதுவரிடம் பேச்சு நடத்தி ஓர் இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளார்.

எமது நிலத்தில் விவசாயத்தை மேற்கொள்வதற்கு உகந்த உரத்தை புதிதாக உற்பத்தி செய்து, அதனை அனுப்பி வைக்குமாறு நாம் கேட்டுள்ளோம்.

நாட்டில் தற்போது நிலவும் விவசாயிகளின் போராட்டத்துக்கு பின்னணியில் இரசாயன உரங்களை இறக்குமதி செய்பவர்கள் காணப்படுகின்றனர். அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதால் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. ஆதரவாளர்களைக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. -என்றார்.

(ஒ-4)


## வீடு வாடகைக்கு

வவுனியா நெளுக்குளம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (CS 17870) (3.6)

தொடர்பு: 071 484 1069

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு முன் அனுபவ முள்ள பெண் வேலையாட்கள் தேவை. (CS 40806)(3.6)

தொடர்பு : 077 007 7465

## உடனடி வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற PVT (LTD) Company இல் பல வகையான வேலைவாய்ப்புகள் உள்ளன. தரம் 8 இலிருந்து A/L வரை தகுதியுள்ளவர்கள் சமுகம் தரவும். நேர்முகத்தேர்வு 29 ஆம் 30 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பி.ப.5.00 மணிவரை

(cs.40808) (2.6)

076 674 3807, 077 828 1092


## மரண அறிவித்தல்



### காசிப்பிள்ளை அன்னப்பிள்ளை

பிறப்பு 15.07.1930 இறப்பு 28.10.2021

மாரீசன் கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை அன்னப் பிள்ளை நேற்று (28.10.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னப்பெடி - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், நாகம்மா (ராணி), ஈஸ்வரி (இராசாத்தி), ஜெயக்குமார் (இந்திரன் - கனடா), சிவகுமார் (சிவம் - நோர்வே) ஆகியோரின் அன்பு தாயும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற முருகேசு, சித்திரா, திலகா ஆகியோரின் பாசமிகு மாமியும், தயானந்தன், கோபிநாத், அரவிந், சியாமி, விஜித், றாஜினி, கபிலன் (கபில்), தீபிகா, புவியா, டெவி, அருண், பகிரதன் ஆகியோரின் பேர்த்தியும், அஞ்சலி, ஆகாஜ், யதுஸ், அரியானா, ஜெயிற்ரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்

(cr 35484) (2.6)

## நினைவுநாளும் நன்றி நவிலலும்

41ஆவது நாள் 31ஆவது நாள்



**அமரர் திரு. முத்தையா அருளையா**
(இளைப்பாறிய அதிபர்)

**அமரர் திருமதி தவமலர் அருளையா**
(இளைப்பாறிய ஆசிரியை)

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம் - மல்லாகம்.

உயிருக்கு உயிரான எமது அன்புத் தாய் தந்தையர் இருவரும் அடுத்தடுத்து இயற்கை எய்திய செய்தியை அறிந்த அத்தருணமே நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகள் நிகழ்ந்தபோது நேரடியாக வந்து கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் இணையவழி நேரலை ஒளிபரப்பில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிகழ்வுகளில் அஞ்சலி உரைநிகழ்த்தியோருக்கும் சமூக ஊடகங்கள் வழியாக இரங்கல் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி மூலமாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் துயர்மிக்க வேளையில் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் பத்திரிகைகள். கண்ணீர் அஞ்சலிக் கீற்றுக்கள். பிரசுரங்கள் வாயிலாக இரங்கல் தெரிவித்தவர்கள் மலர் வளையங்கள் வைத்து மரியாதை செலுத்தியவர்கள் இறுதி ஊர்வலத்திலும் தகனக்கிரியையிலும் கலந்து கொண்டு சிறப்பானதும் அமைதியானதுமான முறையிலும் மிகுந்தமரியாதையுடனும் எமது பெற்றோரை வழியனுப்பிவைத்தவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றியுடன்
திரு. அருளையா செந்தில்வாசன் (மகன்)
செல்வி மைதிலி அருளையா (மகள்)

(cs 17868 (2.6)

"முருகநாமம்"
மல்லாகம்.
29.10.2021



பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.